பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 09 வியாழக்கிழமை 25.07.2024 கதிர் 260

## 3 ஆயிரம் பிக்குகளுக்கு நேற்று புலமைப்பரிசில்

சாதாரணதர, உயர்தர மாணவர்களைப் போன்று பிரிவெனா மற்றும் பிக்குனிகளுக்கான கல்வி நிறுவனங்களில் கற்கும் பிக்குகள் மற்றும் பிக்குனிகளுக்கு ஜனாதிபதி நிதியத்தின் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ்3000பேருக்கு ☞ 8

## வங்கி வட்டி வீதங்கள் மேலும் குறைப்பு

இலங்கை மத்திய வங்கி அதன் கொள்கை வட்டிவீதங்களைமேலும் குறைத்துள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையானது இடம்பெற்ற அதன் கூட்டத்தில் துணைநில் வைப்புவசதிவீதத்தினை 8.5 சதவீதத்திலிருந்து 8.25 சதவீதமாகவும் ஆகவும், துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினை ☞ 8

## ஒற்றையாட்சியை நிராகரித்து சுயாட்சி அலகு உருவாக்கம்

### அதுவே இலக்கு என்கிறது மக்கள் போராட்ட முன்னணி

சுயாட்சியுடன் கூடிய, ஒற்றைய ஆட்சியை நிராகரிக்கின்ற அலகுகளை உருவாக்குவோம் என்ற வாக்குறுதியோடு மக்கள் போராட்ட முன்னணி இந்த அரசியல் களத்தில் குதித்திருக்கின்றது என தெரிவித்துள்ள மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர் ராஜ்குமார் ரஜீவ்காந் சுயாட்சிக்காக தொடர்ந்தும் போராடுவோம் எனவும் தெரிவித்துள்ளார்

அரகலய போராட்ட குழுவான மக்கள் போராட்ட முன்னணியாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குகிழக்கில் பிறந்து வளர்ந்து வடக்கு கிழக்கினது ஒடுக்குமுறைகளை மிக மோசமாக சந்தித்தவன் என்ற வகையிலே எங்களது அரசியல் பிரச்சினைகள், இன்று வரை தீராமலிருக்கின்றது என்ற வருத்தம் இன்றுவரை எங்களிற்கு இருக்கின்றது.

குறிப்பாக இன்று கறுப்பு ஜூலை தினம்,1983ஆம் ஆண்டு கொத்துகொத்தாக தமிழ் மக்கள் தலைநகரில் கொல்லப்பட்டிருந்தார்கள். இன்றுவரை எந்தவொரு பொறுப்புக்கூறலும் இல்லாத அந்த நிகழ்வு போல எத்தனை ஆயிரக்கணக்கான கொலைகளும், வன்முறைகளும், காணாமல் ஆக்கப்படுதலும், தமிழ் மக்களிற்கு எதிராக நிகழ்த்தப்பட்டிருக் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக் கட்சி தனது வேட்பாளரை நிறுத்துவதாகச் சொல்லி வந்தாலும் இன்னும் அவர் யார் என்பது அறிவிக்கப்படவில்லை. தேர்தல் நாள் அறிவிக்கப்பட்ட பின்னர் அவரது பெயர் வெளியிடப்படும் என்று கட்சித் தலைவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், ரணிலுக்கும் ராஜபக்சக்களுக்கும் இடையிலான 'டீல்' இன்னும் சரிவரப் படியாததன் காரணமாகவே தனது வேட்பாளரைப் பெயரிடுவதில் மொட்டுக்கட்சி தாமதம் காட்டுகின்றது என்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

அந்த 'டீல்', ரணிலுக்கு மொட்டுக் கட்சி ஆதரவளித்து அவர் மீண்டும் ஜனாதிபதியானால் பிரதமர் பதவி பொது ஜன பெரமுனவிற்கு வழங்கப்படவேண்டும் என்பதுதான் என்றும் அந்த வட்டாரங்கள் கூறுகின்றன. இதனை மொட்டுக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்சவும் கோடிகாட்டியிருக்கிறார்.

ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் உறுப்பினர் அல்லாதவொருவருக்கு ஆதரவு வழங்குவதாயின் பிரதமர் பதவி பொது ஜன பெரமுனவிற்கு கிடைக்க வேண்டுமென நாமல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாம் பெரமுனவிற்கு வெளியில் இருந்து வேட்பாளர் ஒருவரைக் கொண்டுவந்தால் கட்சிக்கு பிரதமர் பதவி கிடைக்கும் என்று ☞ 2

# பொலிஸ் மா அதிபராக தென்னகோன் பதவி வகிக்க நீதிமன்றம் தடை விதிப்பு

தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்றுவதை தடுத்து உயர்நீதிமன்றத்தினால் நேற்று இடைக்காலதடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர் குழாம் இந்த ஆணையை பிறப்பித்தது. தேசபந்து தென்னகோன் பொலிஸ் மாஅதிபராகநியமிக்கப்பட்டமைக்கு எதிராக கொழும்பு பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட 08 தரப்பினர் தாக்கல் செய்த மனுக்கள் மீதான விசாரணைகளுக்கு அனுமதியளித்து இந்ததீர்ப்புஅறிவிக்கப்பட்டுள்ளது.

மனு மீதான விசாரணை முடிவுறும் வரை இந்தத் தடை செல்லுபடியாகும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றநீதியரசர்களான ☞ 2

## 47 பொலிஸ் நிலைய பொறுப்பதிகார்களுக்கு திடீர் இடமாற்றம்

உடன் அமுலாகும் வகையில் 47 பொலிஸ்நிலையபொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவையின் தேவையை அடிப்படையாக் கொண்டு இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

குறித்த இடமாற்றத்திற்கு பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## பதில் பொலிஸ் மா அதிபரின் கீழ் ஜனாதிபதி தேர்தலை நடத்தலாம்

### ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் தெரிவிப்பு

பதில் பொலிஸ் மா அதிபரின் கீழாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

நீதிமன்றவிசாரணை முடியும் வரை தற்போதையபொலிஸ்மாஅதிபர் தான் முன்பு வகித்த பதவியை வகிக்க முடியும் என்று ☞ 2

## நாம் அடுத்த 10 ஆண்டுகளில் திட்டமிட்டு செயற்படவேண்டும்

### பொருளாதார வளர்ச்சி தொடர்பில் ஜனாதிபதி கருத்து

அடுத்த 10 ஆண்டுகளில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். அந்தப் பொருளாதாரப் பரிமாற்றத்திற்கு தேவையான ☞ 2

## சாரத்தியம் குறித்த கறுப்புப் பட்டியல் மூன்று மாதங்களுக்குள் அறிமுகம்

சாரதி அனுமதிப் பத்திரத்தை கருப்புப் பட்டியலில் இடும் மூன்றுமாதங்களுக்குள் அறிமுகப்படுத்தப்படும். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்ட மதிப்பீடுகள் இடம்பெற்றுவருகின்றன என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்தார்.

மோட்டார் ☞ 2

## நீதிமன்றம் தடையுத்தரவு

ஆளும் தரப்பின் அபிவிருத்திதிட்டங்களை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்ட சமூக ஆலோசனை குழுக்கள் நடைமுறைப்படுத்தப் படுவதை தடுத்து உயர் நீதிமன்றம் நேற்றையதினம் இடைக்கால தடையுத் தரவு பிறப்பித்துள்ளது.

உள்ளுராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள வேட்பாளர்கள்ஷ அரச சொத்துக்களை பயன்படுத்தாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு அரச நிறுவனங்கள் மற்றும் அதன் தலைவர்களுக்கு ஆலோசனை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி செயலாளருக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்தது.

அந்த ☞ 2

## நீதிமன்றம் மறுப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் தாக்கல்செய்யப்பட்டுள்ள மனுவில் தலையீடு செய்வதற்கு அனுமதி வழங்குமாறு கோரி இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தாக்கல் செய்திருந்த மனுவில் கோரப்பட்ட இடைக்கால தடையுத்தரவைவழங்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம்மறுத்துள்ளது.

இலங்கை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்பட்ட தமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைஎடுப்பதற்கு கட்சிமேற்கொண்டதீர்மானத்திற்குஎதிராகதயாசிறி ஜயசேகரவினால் மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. இந்நிலையிரல் மனுவில் ☞ 2

## ஜனாஸாக்களை எரிக்கும்படி ஆலோசனை தந்தது யார்?

### பகிரங்கப்படுத்துங்கள் என்கிறார் எதிர்க் கட்சித் தலைவர்

ஜனாஸாக்களை எரிக்க ஆலோசனை வழங்கியவர்கள் யார் என்பதை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றைமுன்வைத்து குறிப்பிடுகையி ☞ 8

## நீதிமன்றத் தீர்ப்பு குறித்து ஆராய விசேட அமைச்சரவைக் கூட்டம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விசேட அமைச்சரவைக்கூட்டம் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி செயகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் ஆராயப்பட்டது. அதன்போது குறித்த இடைக் காலஉத்தரவு மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக ஆராய்வதற்கு கால அவகாசம் அவசியமென அமைச்சர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள் என்று ☞ 2

## மன்னிப்பு கேட்பது மட்டும் போதாது தகனம் செய்தோர் விவரமும் தேவை

### ஹக்கீம் நாடாளுமன்றத்தில் வலியுறுத்து

கொவிட்டில் உயிரிழந்து தகனம் செய்யப்பட்டவர்களின் பெயர் பட்டியலை அரசாங்கம் தொடர்ந்தும் மறைக்காமல் அதனை வெளிப்படுத்த வேண்டும். எல்லாவற்றையும் செய்துவிட்டு மன்னிப்பு மாத்திரம் கோரி முடித்துக்கொள்ள முடியாதுஎன்றுஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொவிட் ☞ 2

## இனி இது .....

நம்பிக்கைகொண்டிருக்கின்றோம். கட்சியின் சார்பில் வேட்பாளர் களமிறக்கப்படுகின்றபோதுகட்சியும், கட்சியின்அரசியல்குழுவும்பிரதமர் பதவிக்கானநபர் குறித்து தீர்மானம் எடுக்கும்.

ஜனாதிபதி வேட்பாளருக்கன பெரமுனவின் பெயர் பட்டியலில் தம்மிக்க பெரேராவும் உள்ளார். அவரது பெயர் முன்னிலையில் உள்ளது. இன்னும் சில தொழில்முயற்சியாளர்களும் உள்ளனர். அமைச்சரவையில் உள்ள இருவரின் பெயர்களும் உள்ளன.ஆகவேகலந்துரையாடியே தீர்மானிப்போம்" என்றார்.

ராஜபக்சக்களின் ஆதரவைப் பெறவேண்டும் என்றால் ரணில் இந்தவலைக்குஒத்துப்போகவேண்டும். அப்படிச் செய்தால் ஏற்கனவே ரணிலின் பக்கம் நிற்கும் மொட்டுக் கட்சியைச் சேர்ந்தவர்களுடன் முரண்படும் நிலை ஏற்படும். இதனால்தான் ரணிலும் தனது முடிவைத் தெரிவிக்காமலேயே இழுத்தடித்து வருகின்றார் என்கின்றனஅரசியல்வட்டாரங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யசந்த கோதாகொட, மஹிந்த சமயவர்தன மற்றும் அச்சல வெங்கப்புலிஆகியோரைக்கொண்ட நீதியரசர் குழாம் முன்னிலையில் குறித்த மனுக்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மனு மீதான விசாரணை 6 நாட்கள் நடைபெற்றதுடன் கடந்த வியாழக்கிழமைவிசாரணைசுமார் 8 மணித்தியாலங்களுக்கு நீடித்தது. மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ, ஜனாதிபதி சட்டத்தரணி ஷமில் பெரேரா, ஜனாதிபதிசட்டத்தரணிசாலியபீரிஸ் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி விரான் கொரயா, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, சட்டத்தரணி திஷய வேரகொட உள்ளிட்ட சட்டத்தரணிகள் மன்றில் விடயங்களை சமர்ப்பித்தனர்.

பொலிஸ்மாஅதிபராகநியமனம் செய்வதற்கு ஜனாதிபதியினால் பரிந்துரைக்கப்பட்ட தேஷ்பந்து தென்னகோனின் நியமனம் அரசமைப்புபேரவையினால்உத்தி யோகபூர்வமாக அங்கீகரிக்கப் படவில்லைஎனமனுதாரர்கள்தமது மனுக்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்தகைய சூழலில் அவரை அந்தப்பொறுப்பில்அமர்த்தஜனாதிபதி எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என மனுதாரர்கள் வலியுறுத்தியுள்ளனர். அதன் காரணமாக குறித்த நியமனத்தை செல்லுபடியற்றதாக்கும்படி உத்தர விடுமாறு மனுக்களின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்களில் சபாநாயகர் உள்ளிட்ட அரசமைப்புபேரவையின் அங்கத்தவர்கள், தேஷபந்து தென்னகோன், சட்ட மா அதிபர் உள்ளிட்டவர்கள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## நீதிமன்றத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி.பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸ் மா அதிபர் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் சட்ட அம்சங்களை ஆழமாக ஆராய்ந்து அடுத்த இரண்டு நாட்க ளில் அமைச்சர்கள் ஆராய்ந்து இதற்கானபதிலைஅறிவிப்பதுஎன்று நடைபெற்றவிசேடஅமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, அமைச்சர் சுசில்பிரேமஜயந்ததெரிவிக்கையில்,

கடந்ததிங்கட்கிழமைநடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போது நிறைவுபெறாதவிடயங்களைபூர்த்தி செய்வதற்காகவேஅமைச்சரவைக் கூட்டம்கூட்டப்பட்டது. இதன்போது பத்துமுதல்பதினைந்துவரையிலான அமைச்சரவை பத்திரங்களுக்க அனுமதி அளிக்கப்பட்டது. அதுமட்டுமன்றி,அந்தஅமைச்சரவை பத்திரங்கள் தொடர்பில் கலந் துரையாடப்பட்டது. இதன்போது பொலிஸ்மாஅதிபர்சம்பந்தமாகவோ, தேர்தல் சம்பந்தமாகவே கலந்துரையாடப்படவில்லை என்றார்.

## பதில் பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நம்புவதாக அவர் கூறினார்.

இன்றையதினம்பதில்பொலிஸ் மா அதிபராக பொருத்தமான நபர் நியமிக்கப்படுவார் என்று தாம் நம்புவதாக கூறிய அவர், விசாரணைமுடியும்வரைபொலிஸ் மா அதிபர் இல்லை, ஆனால், தற்காலிக பொலிஸ் மா அதிபரின் கீழ் தேர்தலை நடத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

நியமிக்கப்பட்ட ஜனாதிபதியின் கீழ் நாடு ஆளப்படும் பட்சத்தில், பதில் பொலிஸ் மா அதிபரின் கீழ் தேர்தலை நடத்துவது பெரிய விடயம் அல்ல என்பதால் எந்த பிரச்சினையும் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நீதிமன்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்குமாறு நிதியமைச்சின் செயலாளர்உள்ளிட்டதரப்பினருக்கு உத்தரவிடுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமைமனுஇன்றுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதேஇந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## சாரத்தியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்து திணைக்களத்தின் எதிர்வரும்வேலைத்திட்டம்மற்றும் தற்போதைய வேலைத்திட்டம் தொடர்பில் ஆளும்தரப்பு தகவல் திணைக்களத்தில்நேற்றுநடைபெற்ற விசேடசெய்தியாளர்மாநாட்டிலேயே அவர்மேற்கண்டவாறுதெரிவித்தார்.

உலகின் பிற நாடுகளில் பின்ப ற்றப்படும் இந்த நடை முறைக்கமைய, சாரதி அனுமதிப்பத்திரங்களை கறுப்புப் பட்டியலில் இடுவதனூடாக, போக்குவரத்து விபத்துகளைக் குறைத்து, நெடுஞ்சாலையில் பயணிக்கும்; சாரதிகளிடையே ஒழுக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சாரதிகள்மற்றும்பாதசாரிகளின் கவனக்குறைவு காரணமாகவே 75% க்கும் அதிகமான வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை வலியுறுத்திய மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் எதிர்வரும்மூன்றுமாதங்களுக்குள் கருப்புப் பட்டியல் முறை அமுல்படுத்தப்படும் என்றும் வலியுறுத்தினார்.

இதன் மூலம், நெடுஞ்சாலைகளில் இடம்பெறுகின்ற வீதி ஒழுங்கு விதிகளை மீறுவதற்கு எதிராக பொலிஸாரினால் தண்டப்பத்திரம் வழங்கப்படும் அனைத்து சாரதிகளுக்கும் அவர்களது தவறுகளுக்கமைய கருப்புப்பட்டியலில் இடுவதற்கான புள்ளிகள் சேர்க்கப்படும் என்றும் அவர் மேலும் அறிவித்தார்.

## மன்னிப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றுக்குள்ளாகி மரணித்த முஸ்லிம்சமூகத்தின்சடலங்களை எரிப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு மன்னிப்பு கோருவதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும்தீர்மானம்தொடர்பில் பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாகஅவர்தொடர்ந்து குறிப்பிடுகையில்,

கொவிட் தொற்றில் மரணித்தவர்களை தகனம் செய்யபட்ட விடயம் தொடர்பில் பல தடவைகள் இந்த சபையில் கேள்வி எழுப்பி இருந்தேன். கொவிட்தகனத்துக்குள்ளாக்கப்பட்ட முஸ்லிம் பிரஜைகளின் பெயர் பட்டியலைவழங்குமாறுமுன்னாள் சுகாதார அமைச்சரிடம் இந்த சபையில் கேட்டேன். அதற்கு அவர், அவ்வாறானஎந்ததகவலும்இல்லை என அவர் தெரிவித்திருந்தார். இது உண்மையை மறைப்பதற்கு செய்யும் நடவடிக்கை. அதனால் தகனத்துக்குள்ளானவர்களின் பெயர் பட்டியலை அரசாங்கம் தரவேண்டும்.

அரசாங்கம் எல்லாவற்றையும் செய்துவிட்டு முஸ்லிம் சமூகத்திடம் மன்னிப்பு கோரிலிட்டு இதனை முடித்துக்கொள்ள முடியாது. இதற்கு காரணமானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதேபோன்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவேண்டும். இதற்கு காரணமானவர்களின் பெயர் பட்டியலைவெளிப்படுத்தவேண்டும் என்றார்.

முஜிபுர் ரஹ்மான்

இதன்போது எழுந்த முஜிபுர் ரஹ்மான்குறிப்பிடுகையில், தகனம் செய்தமைக்கு மன்னிப்பு கோர அரசாங்கம் தீர்மானத்துள்ளதன் மூலம் இந்த நடவடிக்கை பலவந்தமாக செய்யப்பட்டது என்பது உறுதியாகி இருக்கிறது. இது திட்டமிட்டு செய்யப்பட்டுள்ளது என்பதை அரசாங்கம் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. அதனால் இதனை யார் செய்தார்கள் என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும். கொவிட் மரணம் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு சுகாதார வழிகாட்டல் ஒன்றை வெளியிட்டிருந்தது. ஆனால் அரசாங்கம் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு பதிலாகவைத்தியர்சன்னஜயசுமன தலைமையிலான குழுவின் அறிக்கையைமாத்திரமேபின்பற்றி வந்தது.

என்றாலும் இதற்கு கடும் எதிர்ப்பு வர ஆரம்பித்த பின்னர், சர்வதேசத்தின் அழுத்தத்துக்கு மத்தியில் அடக்கம் செய்ய அனுமதி வழங்கினார்கள். மாறாகவிஞ்ஞான ஆய்வுகளின்மூலம்இந்தஅனுமதி வழங்கப்படவில்லை.அதனால் அடக்கும்செய்வதற்குஉலகசுகாதார அமைப்பின் அனுமதி இருந்தும் அதற்கு அனுமதி வழங்காமல் தகனம் செய்ய வேண்டும் என தெரிவித்தவர்கள் யார் என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும். இவரகள்தான் இதற்கு பொறுப்பு சொல்ல வேண்டும் என்றார்.

மரிக்கார் எம்.பி

அதனைத் தொடர்ந்து எழுந்த மரிக்கார் எம்.பி குறிப்பிடுகையில், அரசாங்கத்தின் மன்னிப்பு கோரும் தீர்மானம் ராஜபக்ஷவினரை பாதுகாப்பதற்கான நடவடிக்கை. தகனம் செய்ய எடுக்கப்பட்ட தீர்மானம்அரசியல்தீர்மானமாகும். அதனால்இதற்குகாரணமானவர்கள் யார். அவர்களை இனம் கண்டு, வெளிப்படுத்தவேண்டும். அத்துடன் இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எடுக்கப்போகும்நடவடிக்கைஎன்ன என்பதை அரசாங்கம் தெரிவிக்க வேண்டும் என்றார்.

## ஒற்றையாட்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. தொடர்ந்து அவர்க ளுக்கான நீதி மறுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இந்த நேரத்தில் தென்னி லங்கையிலிருந்து எத்தனையோ கட்சிகள் வடக்குநோக்கி வருகின்றன, அவர்கள் தமிழ் மக்களிற்கு என்ன வேண்டும் என்ன கொடுக்கப்போகின்றோம் என்பது தொடர்பில் இங்கு ஒன்றை கூறிவிட்டு,தென்னிலங்கையில் அதற்கு மாற்றான வேறு ஒன்றை கூறுவார்கள் கூறுவார்கள்.

அங்கு இனவாதத்தையும் இங்குவாக்குகளைபெறுவதற்கான யுக்தியையும் சிங்கள அரசியல் வாதிகள் தொடர்ந்து கடைப்பிடித் துக்கொண்டி ருக்கின்றார்கள். ஆகவே இந்த விடயத்தில், இந்தமாதிரி விடயங்களை தென்னிலங்கையிலும்தமிழ்மக்கள் மத்தியிலும் சரியானவிடயங்களை தெரிவிக்ககூடிய ஒரே கட்சியாக மக்கள் போராட்ட முன்னணி உருவெடுத்துள்ளது.

நான் நினைக்கின்றேன், வரலாற்றில் முதலதடவையாக சுயாட்சியுடன் கூடிய , ஒற்றைய ஆட்சியைநிராகரிக்கின்ற,அலகுகளை உருவாக்குவோம் என்ற வாக்குறுதியோடு மக்கள் போராட்ட முன்னணி இந்த அரசியல் களத்தில் குதித்திருக்கின்றது. இது தென்னிலங்கையில் உள்ள இனவாதிகள் மத்தியில் எப்படியான குழப்பங்களை ஏற்படுத்தும் என்பதை நன்கறிந்தும் அவை எல்லாவற்றையும் தாண்டி, மக்கள் நலன்கருதி, ஒட்டுமொத்த நாடும் முன்னோக்கிச் செல்லவேண்டும், நீண்டகால பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்என்றநோக்கில் மக்கள் போராட்ட முன்னணி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்துள்ளது.

குறிப்பாக தென்னிலங்கையில் இருக்ககூடிய பிரதான இரு சிங்கள இடதுசாரிகட்சிகளும்வடக்குகிழக்கில் நீண்டகாலமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு இடதுசாரி கட்சியும்இணைந்துஇந்தகட்சியை உருவாக்கியுள்ளன. குறிப்பாக சுயாட்சி அலகுகள் என்பது தமி;ழ் மக்கள் மிக நீண்டகாலமாக தீர்வு என்ற அடிப்படையில் எதனை கேட்டுக்கொண்டிருந்தார்களோ, அதனை எந்தவித பாரபட்சமும் இல்லாமல் அவர்களிற்கு ஒரு ஆட்சிமுறையை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்ற ஒரே எண்ணத்தில் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

எழுத்துவடிவத்தில், மூன்றுமொழிகளிலும்முன்மொழியப்பட்டுள்ளது. ஏற்கனவே சில கட்சிகள் மாறிமாறி கூறுவது போல இல்லாமல், தீர்க்கமாக உண்மையாக தெரிவிக்கப்பட்டுள்ள விடயத்தை நான் இன்று ஊடகங்களிற்கு தெரியப்படுத்த விரும்புகின்றேன்.

நீங்கள் என்று ஆட்சிக்கு வரப்போகின்றீர்கள் இதெல்லாம் எப்போது நடக்கப்போகின்றது என்ற கேள்விகள் எல்லாம் மக்களிற்கு இருக்கலாம்.

சுயாட்சியைஅடைவதற்காகவும் எங்கள் போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்பதை நான் இங்குள்ள தமிழ் மக்களிற்கும் ஊடகவியலாளர்களிற்கும் தெளிவுபடுத்த ஆசைப்படுகின்றேன். குறிப்பாக வடக்குகிழக்கை பொறுத்தவரையில் சிங்களமயமாக்கல் திட்டமிடப்பட்டு மிக நீண்டகாலமாக இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது, இதனைநிறுத் துவதற்கான முன்மொழிவுகளை மேற்கொண்டிருக்கின்றோம், இந்த அடிப்படையில் சிங்களமயமாக்கல் தடுத்து நிறுத்தப்படும்.

அதேபோலபௌத்தமயமாக்கல் தொல்பொருள் என்ற பெயரிலே குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கிலே இடம்பெறுகின்றது. எந்தவிதமான தயவு தாட்சண்யம் இல்லாம் வடக்குகிழக்கு தமிழ் மக்களின்அடையாளங்களிற்குமேல் எத்தனையோ ஆயிரக்கணக்கான நிலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன,

அந்த நிலங்கள் அனைத்தும் விடுவிக்கப்படவேண்டும் அவை தமி;ழ் மக்களிற்குரிய நிலங்கள் எனவே தொல்பொருள் என்ற பெயரில் கைப்பற்றப்பட்ட அத்தனை நிலங்களையும்விடுவிக்கவேண்டும் என்ற கொள்கையையும் நாங்கள் முன்வைத்திருக்கின்றோம்என்றார்.

## நீதிமன்றம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையீடு செய்வதற்கு அனுமதி அளிக்கும் வகையில் இடையீட்டு மனுதாரராக பிரவேசிப்பதற்கு மன்றின் அனுமதியை இராஜாங்க அமைச்சர்கோரியிருந்தார். எனினும் மன்று அதற்கு அனுமதி மறுத்த நிலையில், தயாசிறியின் மனு மீதான விசாரணை விரைவில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## நாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டங்களை கொண்டு வர ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏற்றுமதிப்பொருளாதாரம் வலுப்பெற்று உலக சந்தையை வெல்லவேண்டும்என்றுஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கஉறுதியளித்தார்.

கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியின் 106 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 30 ஆண்டுகளில் இந்த நாடுவேகமாகமாறிவிட்டது. ஆனால் 4வருடங்களுக்குமுன்னர், கொவிட் தொற்றுநோய் காரணமாக, எமது பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அனைத்து மக்களும் அந்தச் சிரமத்தை எதிர்கொண்டனர். எரிபொருள், மருந்துகள் மற்றும் உணவுப் பொருட்களைப் பெற நாங்கள் வரிசையில் நிற்க வேண்டியிருந்தது.

'கிசா கோதமியா மாம்பழக் கொத்தை தேடிப் போனதை' போல இந்தக்கஷ்டத்தைகாணாதவர்களை தேடிக்கொள்ள முடியாமல் இருந்தது. எது எவ்வாறாயினும் அந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து தற்போது நாம் மீண்டுள்ளோம். வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டவுடன் எமக்கு வெளிநாட்டு உதவிகளும் கிடைக்கும். ஆனால் இன்னும் சில சிக்கல்கள் உள்ளன. எனவே, சரியான திட்டத்துடன் பயணிக்க வேண்டும். அதனால் அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் இந்த பொருளாதாரச் சுமையை படிப்படியாகக் குறைத்து பொருளாதாரத்தை பலப்படுத்த முடியும்.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதன்மூலம்,மக்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்க முடியும். கடந்த 4 வருடங்களாக கல்விக்கான செலவீனங்களை மட்டுப்படுத்தியிருந்தோம். எனவே இப்போது கல்விக்காக பணம் செலவழித்து புதிய தொழில்நுட்பத்துடன் பாடசாலை கட்டமைப்பை ஒழுங்குபடுத்த எதிர்பார்க்கிறோம். இன்று இந்த கண்காட்சியில் கல்லூரி மாணவர்கள் குழுதயாரித்தட்ரோன் உபகரணங்களைப் பார்த்தோம்.

பாடசாலைகளில் செயற்கை நுண்ணறிவு (புனூ) குழுக்கள் உருவாக்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு பணம் தேவைப்படுகிறது. மேலும், பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கவேண்டும். கல்வித் துறையில்இந்தப்பிரச்சினைகளைத் தீர்க்கவும், கஷ்டப் பிரதேச பாடசாலைகளுக்கு உதவவும் முன்வருமாறு எலோன் மஸ்கிடம் கோரிக்கைவிடுத்துள்ளேன். இம்மாத இறுதிக்குள்அவருக்குஇலங்கையில் அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான அனுமதிப் பத்திரங்களை வழங்க எதிர்பார்க்கிறோம்.

பாடசாலைக்கல்வியை நிறைவு செய்யும் இளைஞர் யுவதிகள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். எம்மால் 4வருடங்களாக தொழில்வாய்ப்புகள் வழங்க முடியவில்லை. எதிர்காலத்தில் இவர்களின் தொகை மேலும் அதிகரிக்கும். அதற்கு தீர்வு காண வேண்டும். இப்பிரச்சினைகள் அதிகரித்தால் நாட்டில் மீண்டும் போராட்டங்கள் வெடிக்கலாம் .எனவே, தொழில் மற்றும் வருமான வழிகளைஉருவாக்கநாட்டில்பெரிய பொருளாதார மாற்றம் செய்யப்பட வேண்டும்.

சுற்றுலாவிகள் வருகையை 25 இலட்சத்தில் இருந்து 50 இலட்சமாக உயர்த்தி, பெரும் தொழில்நுட்ப பொருளாதாரத்தை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்கு புதிய தொழில்நுட்ப அறிவு கொண்ட இளம் தலைமுறையினர் அவசியம். அந்த நோக்கத்திற்காக, 4 புதிய தொழில்நுட்ப பல்கலைக்க ழகங்களை ஆரம்பிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இந்தத் துறைகள் அனைத்திலும் பெரிய புரட்சியை ஏற்படுத்தவும், நாட்டில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கவும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். அந்த புதிய பொருளாதாரம் உருவாக்கப்படாவிட்டால், இந்த நாட்டின் மாணவர்கக்கு எதிர்காலம் இருக்காது.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# கடலோர பாதுகாப்பு சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கடலோர பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. கடற்கரை மாசுபாடு மற்றும் சட்டவிரோத கட்டுமானங்களை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன்படி கரையோர வளங்கள் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம் புதுப்பிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், இலங்கையின் கரையோர வலயங்களை நிர்வகிப்பதற்கு 'இலங்கை கரையோர வலயம் மற்றும் கரையோர முகாமைத்துவத்திட்டம்' தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இந்தத் திட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்பது சட்டப்பூர்வமான தேவை. 2024 ஆம் ஆண்டில், இலங்கையின் கரையோர வலயங்கள் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம் அதற்கேற்ப புதுப்பிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டில் தொகுக்கப்படவுள்ள இலங்கை கரையோர வலயம் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம், 2008 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் தொகுக்கப்பட்ட திட்டங்களின் அமுலாக்கத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் போது எழுந்த நிதி, நிறுவன, தொழில்நுட்ப மற்றும் பிற சிக்கல்களை மையமாகக் கொண்டு தொகுக்கப்படும்.

அதன்படி, கடலோர முகாமைத்துவம், கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான முகாமைத்துவம், கடலோர மாசு கட்டுப்பாடு, சிறப்பு முகாமைத்துவப் பகுதிகள், ஒழுங்குமுறை பொறிமுறை (கடலோர அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒப்புதல் வழங்கும் செயல்முறை) ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆய்வுகள் அந்தந்த விடயப் பிரிவுகள் தொடர்பான நிபுணர்கள் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் அதிகாரிகளின் பங்கேற்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கருத்தில் கொண்டு புதிய சட்டம் இயற்றப்படுகிறது.

இவ்வருடம் இரணவில, உப்பாறு, கீரிமுண்டலம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்டியாவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி மற்றும் உஸ்வதகையாவ ஆகிய கடற்பகுதிகளில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 14 அவசரகால கரையோரப் பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அபிவிருத்திப் பணிகளுக்காக 520 மின் அனுமதிப்பத் திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அறிக்கையின்படி, இவ்வருடம் ஏற்கனவே 30 கடற்கரை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டங்களும் 4 சதுப்புநில நடவு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக செலவிடப்பட்ட தொகை 300 மில்லியன் ரூபா.

இந்த ஆண்டில், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள மேலாண்மைத் திணைக்களம் 11 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. களுத்துறை கலிடோ, லுனாவ, வடக்கு உடப்பு, நிந்தவூர், சாய்ந்தமருது, மூதூர், மடிஹ, முதுகடுவ, கஹவ, இரணவில மற்றும் பண்டாரமுல்ல ஆகிய பகுதிகளில் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் 7 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. மொரட்டுவை, களுத்துறை, கலிடோ, அம்பலாங்கொடை, போருதொட்டை, சாய்ந்துமருது, நிந்தவூர் மற்றும் திருக்கோவில் ஆகியவை அந்த கடற்கரைகளாகும். அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 388.35 மில்லியன் ரூபா. 2023 ஆம் ஆண்டில் 102 கடற்கரையை சுத்தம் செய்யும் திட்டங்கள் மற்றும் 25 சதுப்பு நிலத் தாவரங்கள் நடும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.கடந்த வருடம் இரணவில, உப்பாறு, கீரிமுண்டலம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்டியாவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி, உஸ்வதகேயாவ, மருதமுனை ஆகிய கடற்கரைகளில் 20 அவசரகால பாதுகாப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சுமார் 342 மீட்டர் பயனுள்ள கடற்கரை பாதுகாக்கப்பட்டுள்ளதாக கரையோரப்பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## குடியியல் நடவடிக்கைமுறை சட்டத் திருத்தம் நிறைவேற்றம்

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தின் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீடு விவாதம் செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரை இடம்பெற்றதுடன், இதனைத் தொடர்ந்து குழு நிலையில் சட்டமூலத்துக்கான திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

(101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக் கைமுறைச் சட்டக்கோவையை திருத்துவதற்கான இந்தச் சட்டமூலம் நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்சவினால் 2024 மே 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், நீதித்துறைச் சட்டத்தின் கீழ் 2360/22 மற்றும் 2371/13 ஆகிய வர்த்தமானி அறிவித்தல்களில் பிரசுரிக்கப்பட்ட இரண்டு ஒழுங்குவிதிகளுக்கும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## முட்டாள்தனமாக முடிவெடுக்கக்கூடாது ஆளும் தரப்பு மீது சஜித் கடும் காட்டம்

### தகவல் தொழில்நுட்பத்தை முக்கிய பாடங்களில் சேர்க்காதது குறித்துவிசனம்

ஆளும் தரப்பினர் முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

2006ஆம் ஆண்டில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடம், முன்மொழியப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தத்தில் பரீட்சை திணைக்களத்தால் மதிப்பிடப்பட்ட 7 முக்கிய பாடங்களுக்குள் உள்ளடக்கப்படவில்லை. இலங்கையை டிஜிட்டல் இலங்கையாக உருவாக்கும் நோக்கில் செயற்படும் இவ்வேளையில், இவ்வாறான முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கக் கூடாது

முன்மொழியப்பட்டுள்ளகல்விச்சீர்திருத்தத்தின்படி, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்ற பாடத்தை கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கான பாடங்களில் ஒன்றாக அதனை உள்ளடக்குவதில்லை என தீர்மானித்துள்ளனர். ஆனால்மாறிவரும்தொழில்நுட்பயுகம்உருவாகியுள்ள இவ்வேளையில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் என்ற பாடம் உள்ளடக்கப்பட வேண்டும். அவ்வாறே அழகியல் பாடத்தையும் நீக்கியுள்ளனர். எனவே இந்தப் பாடங்களை நீக்குவது தொடர்பாக அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் முட்டாள்தனமான செயல். எனவே இது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

# செய்நன்றி மறவா நாட்டு மக்கள் ரணிலுக்கே வாக்களிப்பார்களாம்

## ராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் கருத்து

நமது நாட்டு மக்கள் செய்நன்றி மறக்காத நன்குசிந்தித்துபணியாற்றுவார்கள். அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கே ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றனர் என்று ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடகமையத்தில் செவ்வாய்க் கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில்மிகமோசமானபொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட நாடு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கீழ் இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலத்திற்குள் மீட்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க எமது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் நட்டமடையும் நிலையை தவிர்த்து இலாபம் ஈட்டும் நிலைக்கு வந்துள்ளன.

உலகில் கடுமையான பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள ஏனைய நாடுகள் இவ்வளவு குறுகிய காலத்தில் பொருளாதார ஸ்திரத்தன்மையை எட்டவில்லை. இந்த ஸ்திரத்தன்மையை பேணுகின்றஅதேவேளைபொருளாதாரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அனைத்து தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

ஆளும்தரப்பின் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட வரித் திருத்தங்கள் குறித்தும் மக்கள் மத்தியில் சில எதிர்ப்புகள் எழுந்தன. ஆனால், அந்த முடிவுகளின் நன்மைகளை மக்கள் பெறும்போது, அந்த எதிர்ப்பு மறைந்துவிடும். உலகில் உள்ள ஏனைய நாடுகள் நம் நாட்டைவிட அதிக சதவீத வரிகளை வசூலிக்கின்றன என்பதையும்நினைவில்கொள்ளவேண்டும்.

கடந்த நெருக்கடியின்போது, மக்களிடம் பணம் இருந்தது.ஆனால் வாங்குவதற்கு பொருட்கள் பற்றாக்குறையாக இருந்தது. ஆனால் தற்போது அவ்வாறான நிலை இல்லை. எனினும், இரண்டுவருடங்களுக்கு முன்னர்நாட்டின்நிலைமையைநாம்யாரும் மறந்துவிடவில்லை. எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எமது ஆதரவை வழங்குவோம். மேலும் கட்சி நிறமின்றி ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க மக்களும் தீர்மானித்துள்ளனர்.

அரசியல்வாதிகள் பல்வேறு கட்சிகளில் இணைந்திருந்தாலும் வாக்காளர்கள் மாறப் போவதில்லை என்பதையும் சொல்ல வேண்டும். வரவிருக்கும் தேர்தலில் வாக்கா ளர்கள் தனி நபரை பார்த்தன்றி வேலைத் திட்டத்தைப் பார்த்தே செயற்படுவார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

குறிப்பாக அடுத்த தேர்தலில் பதுளை பிரதேசத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அதிக வாக்குகளை பெறுவார் . நமது நாட்டு மக்கள் செய்நன்றி மறக்காத நன்கு சிந்தித்து பணியாற்றுவார்கள் என்பதை யும் நினைவில் கொள்ள வேண்டும் என் றார்.

# ஹிட்லர் செய்த தவறைப்போன்றே இஸ்ரேலும் இன்று தவறு செய்கிறது

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

ஹிட்லர் யூதர்களை வதை முகாம்களில் அடைத்துவிஷவாயுகளைவிசிறிபடுகொலை களை முன்னெடுத்தார். அன்று ஹிட்லர் செய்தது தவறு போலவே இன்று இஸ்ரேல் செய்து வருவதும் தவறாகும். இந்தத் தவறை தவறாக பார்க்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 354 ஆவது கட்டமாகஸ்மார்ட்வகுப்பறைஉபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன, கண்டி, செங்கடகல, பாததும்பர, கடுகஸ்தோட்டை ஸாஹிரா ஆண்கள் கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு ஜூலை 21 இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாலஸ்தீன மக்கள் பெரும் அரச பயங்கரவாதத்திற்கு ஆளாகியுள்ளனர். உனது தந்தை பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தது போல், நானும் அந்த மக்களின் உரிமைகளுக்காக முன்நிற்பேன். இஸ்ரேல் நாட்டின் தற்போதைய பிரதமருடைய ஆட்சி பலஸ்தீன மக்களை அழித்தொழிக்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது

இங்கு ஒரு நாடாக நாம் முதுகெலும்பை நிமிர்த்திக் கொண்டு தனித் தீர்மனாத்தை எடுத்து செயற்பட வேண்டும். பாலஸ்தீன மக்களும் இஸ்ரேல் அரசும் அடுத்தடுத்து இரு நாடுகளாக ஒருவருக்கொருவர் நல்லிணக்கத்துடனும் நட்புடனும் வாழ வேண்டும்என்பதேஐக்கியமக்கள்சக்தியின் நிலைப்பாடாகும். இதற்கு ஆதரவாக முன்நிற்பேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி நிதியத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

யார் தவறு செய்தாலும் அதைத் தவறாகப் பார்க்கும் மனப்பாங்கு இருக்க வேண்டும். பாலஸ்தீனமக்களுக்காகநான்முன்நிற்பேன். பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக ஐ.நா பொதுச்சபை பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. நிறைவேற்றப்பட்ட ஒஸ்லோ மற்றும் ஜெனிவா ஒப்பந்தங்கள் பல காணப்படுகின்றன. உலகத்தில் என்று இருந்தாலும் சரி, நமது நாட்டில் என்று இருந்தாலும் சரி, தீவிரவாதத்துக்கு இடமளிக்கக்கூடாது. நடுத்தர பாதையிலும் சரியான பாதையிலே நாம் பயணிக்க வேண்டும். பாலஸ்தீன மக்களின் மக்கள் சார் உரிமைக்காகவும், அவர்களனது தாயகத்தின் மீதான உரிமைகளுக்காகவும் நாடாகநாம்முன்நிற்போம்நாம்அனைவரும் சகோதரத்துவம், நல்லிணக்கம், ஒற்றுமை, நட்புடன் வாழ வேண்டும்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் என அனைத்துப் பிரஜைகளும் மதவாதம், மத பேதம், இனவாதம், இன பேதங்களை நிராகரித்து ஒரு தாயின் பிள்ளைகளாக நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தை ஆரம்பிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நமது நாட்டின் கல்வி முறையில் பல குறைபாடுகள் காணப்டுகின்றன. கல்வியை கட்டியெழுப்ப அரசாங்க நிதி அதிகரிக்கப்படுவதாக கூறப்பட்டாலும், அரசாங்க நிதியை மட்டும் கொண்டு பாடசாலைகளைக் கட்டியெழுப்ப முடியாது என்று என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியாக, ஐக்கிய மக்கள் சக்தி பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களுக்கு மட்டும்இதுவரைஒருபில்லியன்ரூபாவிற்கும் மேல் செலவிட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி கல்விஇ சுகாதாரம் மற்றும் பிற துறைகளை கட்டியெழுப்ப விசேட திட்டத்தை வகுத்துள்ளது. இதன் மூலம் இலவசக் கல்வியை உயர் மட்டத்திற்கு கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசியல் நாடகமாக இருக்கக்கூடாது

உலகப் பெருந்தொற்றான கொரோனா கொவிட்—19 தாக்கத்தால் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை (உடல்களை) எரித்தமை தொடர்பான விவகாரம் இப்போது திடீரெனச் சூடுபிடித்துள்ளது. இந்த வார நாடாளுமன்ற அமர்வில் அதிகம் பேசப்பட்ட விடயமாக இது அமைந்திருந்தது. நாடாளுமன்றத்திற்கு வெளியேயும் இது பேசுபொருளாகவே இருக்கின்றது. இந்த விடயத்தில் முஸ்லிம்களிடம் ஆளும் தரப்பு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்கிற தீர்மானத்தை அமைச்சரவை எடுத்திருப்பது தொடர்பிலேயே தற்போதைய கதையாடல்கள் இடம்பெறுகின்றன.

பெருந்தொற்றுக் காலத்தில் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் பலவந்தமாகத் தகனம் செய்யப்பட்டமையால் முஸ்லிம் சமூகத்தின் மனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்பது உண்மை. அந்தக் காயங்கள் ஆற்றப்படவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கள் இருக்கமுடியாது.

எனவே, இதற்கு மன்னிப்பு கோரும் வகையில் அமைச்சர்களான அலி சப்ரி, விஜயதாஸ ராஜபக்ச மற்றும் ஜீவன் தொண்டமான் ஆகியோர் கூட்டாக சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அந்த அமைச்சரவைப் பத்திரம் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டமைக்காக முஸ்லிம்களிடம் ஆளும்தரப்பு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று பரிந்துரைத்திருக்கின்றது.

ஜனாஸாக்களை எரித்து முஸ்லிம்களின் மனங்களைப் புண்படுத்தியது கோட்டாபய ஆட்சி என்றாலும் அதற்கான பாவமன்னிப்பை மற்றொரு ஆட்சியிலேனும் கேட்பது உயர் பண்புதான். அது வரவேற்கப்படவேண்டியதுதான். இருந்தாலும் அதற்காக தற்போதைய ஆளும்தரப்புத் தேர்ந்தெடுத்திருக்கும் நேரம்தான் சந்தேகத்திற்குரியதாக இருக்கின்றது. அடுத்தது, ஆட்சியாளர்கள் இந்தத் தவறை நிகழ்த்துவதற்குக் காரணமாக இருந்தவர்களைப் பாதுகாத்தபடி, அதாவது பொறுப்புக்கூறலை நிறைவேற்றாதபடி முஸ்லிம்களிடம் மன்னிப்பு மட்டும் கேட்பது என்பதும் ஏதோ ஒரு தேவைக்காக அவர்களை தாஜா செய்யும் முயற்சியாகவும்படுகின்றது.

தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இவ்வாறான அறிவிப்புக்களை விடுத்து மக்களை குழப்பத்துக்குள் தள்ளும் நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன என்ற குரலை நாடாளுமன்றத்திற்குள்ளேயே கேட்கக்கூடியதாக இருந்தது. ''இது வெறும் கண்துடைப்பு என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.மன்னிப்பு கோரி அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்த இந்த மூன்று அமைச்சர்களும் அன்று ஜனாஸாக்களை எரித்த ஆளும்தரப்பிலும் அமைச்சர்களாக இருந்தார்கள்" என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்" நாடாளுமன்ற உறுப்பினர்......... அவரது கருத்தும் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டியது.

கொவிட் தொற்றினால் உயிரிழந்தவர்களில் 276 முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் பலவந்தமான முறையில் தகனம் செய்யப்பட்டுள்ளன என்று சொல்லப்படுகின்றது. ஆனால் அது தொடர்பான துல்லியமான புள்ளிவிவரங்கள் இல்லை என்கிற குற்றச்சாட்டுக்களும் உண்டு. வீணான சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காக உயிரிழந்த முஸ்லிம்களின் உண்மையான விவரத்தை வெளியிடாமல் ஆளும் தரப்புகள் மறைத்துவிட்டன என்ற சந்தேகமும் நிலவுகின்றது. இப்போது மன்னிப்புக் கேட்கப்படுவதற்கு முன்பாக அந்த விவரங்களையெல்லாம் தெளிவுபடுத்துமா—று முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றார்கள். ஆளும் தரப்பு அதனை நிறைவேற்றவேண்டும்.

முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்பதை தேர்தலுக்கான ஒரு உத்தியாகப் பயன்படுத்தாமல் உளப்பூர்வமாக உணர்ந்து ஆளும் தரப்பு மேற்கொள்ள வேண்டியது கட்டாயம். அந்த மன்னிப்பு நம்பகத்தன்மை வாய்ந்ததாக இல்லாதபட்சத்தில் முஸ்லிம்களின் மனங்களில் ஏற்பட்ட காயம் ஆறப்போவதில்லை. இதுபோன்ற உணர்வுபூர்வமான விடயங்களில் அரசியல் செய்வதை ஆளும் தரப்புக்கள் கைவிடாதவரையில் இலங்கையில் நல்லிணக்கமும் நிரந்தர அமைதியும் சாத்தியமற்றது என்பதையும் ஆளும் தரப்புக்கள் நினைவில்கொள்ள வேண்டும்.



# பங்களாதேஷில் மாணவர் கிளர்ச்சி ஏன்?

**டி.வி.பரத்வாஜ்**

பங்களாதேஷில் இடஒதுக்கீட்டில் திருத்தம் கோரி மாணவர்கள் தொடங்கிய போராட்டம் மிகப் பெரியதாக உருவெடுத்திருக்கிறது. போராட்டத்தை ஒடுக்க அரசு பல்வேறு நகரங்களில் ஊரடங்கு, முன் எச்சரிக்கைக் கைது, செய்தி ஊடகங்களுக்குக் கட்டுப்பாடு ஆகியவற்றை மேற்கொண்டுள்ளது. போராட்டங்களில் ஆளுங்கட்சி சார்பு மாணவர் சங்கத்தினரும் - எதிர்த் தரப்பாரும் கைகலப்பு, கல்வீச்சு, நேரடி தாக்குதல் என்று மோதலில் ஈடுபட்டதால் உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. கிளர்ச்சி தொடங்கிய மூன்றாவது நாளே பல்கலைக்கழகங்கள் காலவரம்பின்றி மூடப்பட்டன.

பங்களாதேஷில் எழுத்தறிவு அதிகம். படித்த மாணவர்கள் வேலைகிடைக்காமல் திண்டாடுகின்றனர். வேலைவாய்ப்புக்காக போராடுவது ஒருபுறம் இருக்க, அதிக ஊதியம் தரும் அரசு வேலைகளில் கிட்டத்தட்ட 30%, பங்களாதேஷ் விடுதலைப் போரில் ஈடுபட்டவர்களின் வாரிசுகளுக்காக ஒதுக்கப்படுவதைத்தான் மாணவர்கள் இப்போது கடுமையாக எதிர்க்கின்றனர்.

"நாங்கள் எந்த அரசியல் கட்சியையும் கொள்கை அமைப்புகளையும் சேர்ந்தவர்கள் அல்லர், கல்வித் தகுதி அடிப்படையில் வேலைவாய்ப்புகளைத் தரவேண்டும் என்பதே எங்களுடைய முக்கிய கோரிக்கை" என்று கூறும் மாணவர்கள் பிற வகை இடஒதுக்கீடுகள் தொடர்வதையும் ஆதரிக்கின்றனர். தங்களுடைய இயக்கத்தை, 'பாரபட்சத்துக்கு எதிரான போராட்டம்' என்று அறிவித்துள்ளனர்.

டாக்கா, சிட்டகாங், கொமில்லா ஆகிய நகரங்களில் பல்கலைக்கழகங்களில் அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. விடுதிகளை மூடிய அரசு, மாணவர்களை உடனே வெளியேறுமாறு உத்தரவிட்டிருக்கிறது. மோதல்களிலும் காவல் துறை நடவடிக்கைகளிலும் நானூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் காயம் அடைந்துள்ளனர். கைதானவர்கள் குறித்து சரியான தகவல்கள் இல்லை.

இறந்தவர்கள் எண்ணிக்கை 60க்கும் மேல் உயர்ந்துவிட்டது. பங்களாதேஷில் படிக்கும் வெளிநாட்டு மாணவர்கள் அங்கிருந்து வெளியேறுகின்றனர். இலங்கை மாணவர்களின் நிலை தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாக ஆளும்தரப்பு அறிவித்துள்ளது.

### உயர் நீதிமன்ற தீர்ப்பால் வினை

பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் ஜூலை 5இல் அளித்த தீர்ப்பில், 2018இல் இரத்துசெய்யப்பட்ட, சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் வாரிசுகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் 30% இடங்கள் என்ற ஒதுக்கீட்டை மீண்டும் வழங்குமாறு ஆணையிட்டது. இந்த ஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் பெரிய போராட்டங்களை நடத்தியதால் பிரதமர் ஷேக் ஹசீனாதான் அந்த ஒதுக்கீட்டை 2018இல் இரத்துச் செய்திருந்தார். அவருடைய தலைமையிலான அவாமி லீக் கட்சிதான் நாட்டை ஆள்கிறது.

பிரதான எதிர்க்கட்சிகள் அவருடைய ஆட்சியில் எதிர்க்கட்சிகள் ஒடுக்கப்படுவதாகவும் ஜனநாயகம் முழுமையாக செயல்படவில்லை என்றும் கூறி நாடாளுமன்ற பொதுத் தேர்தலைப் புறக்கணித்தன. அவாமி லீக் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் தொடர்கிறது. இப்போது எதிர்க்கட்சிகள் இந்தக் கிளர்ச்சிக்குப் பின்னால் இருப்பதாக அரசு என்று குற்றஞ்சாட்டுகின்றன.

### முஜிபுர் ரஹ்மான் இடஒதுக்கீடு

பங்களாதேஷின் தந்தை என்று அழைக்கப்படும் முஜிபுர் ரஹ்மான், 1972இல் அரசு வேலைகளில் இடஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வந்தார்:

அரசின் முதலாவது, இரண்டாவது நிலை அதிகாரிகள் பதவியில் 44% - தகுதி அடிப்படையில் நிரப்பப்படும்.

எஞ்சிய 56% வெவ்வேறு பிரிவினருக்கு இடஒதுக்கீடு அடிப்படையில் ஒதுக்கப்படும்.

வங்கதேச விடுதலைக்காகப் போராடியவர்களின் குழந்தைகள், பேரப் பிள்ளைகளுக்கு 30%. பெண்களுக்கு 10%. பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு 10%. இனரீதியான சிறுபான்மையினருக்கு 5%. ஊனமுற்றவர்களுக்கு 1%.

### ரஜாக்கர்கள் என்று வசை

இடஒதுக்கீட்டில் சீர்திருத்தம் கோரி போராடும் மாணவர்கள் அரசுக்கு எதிரானவர்கள், அரசைக் கவிழ்க்க வன்முறை மூலம் முயற்சி செய்கிறார்கள், இவர்கள் 'ரஜாக்கர்கள்' என்று பிரதமர் ஹசீனாவும் ஆளுங்கட்சியினரும் கண்டித்துள்ளனர். பங்களாதேஷ் மொழியில் 'ரஜாக்கர்கள்' என்பவர்கள் கொடூரமானவர்கள்.

பாகிஸ்தான் விசுவாசிகள். பாகிஸ்தானின் பிடியிலிருந்து பங்களாதேஷ் விடுதலை பெற்றுவிடக்கூடாது என்பதற்காக பங்களாதேஷ் நாட்டவரை ஆயுதங்களைக் கொண்டு அடக்கி ஒடுக்கியவர்கள், அன்றைய கிழக்கு பாகிஸ்தான் மக்களை (பங்களாதேஷ்) கடுமையாக நடத்தியவர்கள், பெண்களை கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கிக் கொன்றவர்கள். இவர்களைத்தான் 'ரஜாக்கர்கள்' என்று சொல்வார்கள்.

பங்களாதேஷ் மக்களின் விடுதலை உணர்வுகளுக்கு எதிராகச் செயல்பட்ட 'ரஜாக்கர்'களுடன் தங்களை ஒப்பிட்டதை மாணவர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர். 'நான் யார் தெரியுமா - ரஜாக்கர்' என்று அறிவிக்கும் பதாகைகளையும் அட்டைகளையும் அணிந்து வீதிகளில் குரல் எழுப்புகின்றனர். இது கிளர்ச்சியை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது.

"வங்கதேச விடுதலைக்காகப் போராடியவர்களின் வாரிசுகளுக்கு வேலை தருவதை ஏன் கிளர்ச்சிக் காரர்கள் இவ்வளவு மூர்க்கமாக எதிர்க்கின்றனர்?" என்று பிரதமர் ஷேக் ஹசீனா கேட்டிருக்கிறார். அதற்கு முக்கிய காரணம் தெற்காசிய நாடுகள் அனைத்திலுமே இப்போது பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. விலைவாசியும் வேலையில்லாத் திண்டாட்டமும் வாட்டுகின்றன. தனியார் துறைகளில் முதலீடும் வேலைவாய்ப்பும் உயரவில்லை.

அரசு வேலை நிரந்தரமானது என்பதுடன் அதிக ஊதியம் தருகிறது. எனவே, அதற்குப் போட்டி நிலவுகிறது. அரசுகளும் வெற்றிடங்களை உடனுக்குடன் பூர்த்திசெய்வதில்லை, எனவே அரிதான அந்த வேலையில் 30% ஒதுக்கீடு என்பதைக் குறைத்தால், பொதுப் பிரிவுக்கு அதிகம் வாய்ப்பு கிடைக்கும் என்ற ஆதங்கம் கிளர்ச்சியாளர்களிடம் இருக்கிறது.

மாணவர்களை அழைத்துப் பேசி, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்குப் பதிலாக ஆளுங்கட்சியின் மாணவர் அமைப்பு மூலம் எதிர்த் தாக்குதல் நடத்தியதும் ரஜாக்கர்கள் என்று முத்திரை குத்தியதும் மாணவர்களை ஆவேசம் கொள்ளச் செய்திருக்கிறது. பொறுமையாக கையாளப்பட வேண்டிய விவகாரம் இப்போது கையை மீறிவிட்டது. எங்களுடைய கோரிக்கைகளை அரசு ஏற்கும் வரை கிளர்ச்சியைக் கைவிட மாட்டோம் என்று மாணவர்கள் சூளுரைத்துள்ளனர்.

(நன்றி: அருஞ்சொல்)

# பங்களாதேஷ் நெருக்கடி; இலங்கைக்குக் கவலை

## அமைச்சர் மனுஷ தெரிவிப்பு

பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பில் கவலை அடைந்துள்ளார் என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில்ராஜிகாவிக்கிரமசிங்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

பங்களாதேஷில் 2,835 இலங்கையர்கள் தொழில் மற்றும் தொழிற் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன், அங்கு கல்வி நடவடிக்கைகளுக்காகச் சென்றுள்ள இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில் சரியான எண்ணிக்கையை உடனடியாக தெரிவிக்க முடியாது.

எவ்வாறெனினும், அந்த நாட்டிலுள்ள இலங்கை தூதுவருடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு அங்குள்ள நிலவரம் தொடர்பாக கேட்டறிந்து வருகிறோம். அவர் வழங்கிய தகவல்களின்படி இலங்கையர்கள் எவருக்கும் எந்தவித பாதிப்பும் கிடையாது.

பங்களாதேஷில்உள்ளஇலங்கையர்களுக்கு பாதிப்புகள் ஏற்படும் நிலைகாணப்பட்டால்அவர்களை உடனடியாக நாட்டுக்கு அழைத்துவரும்நடவடிக்கைகளை ஆளும்தரப்பு மேற்கொள்ளும். அத்துடன் அவர்களுக்கான பாதுகாப்பு தொடர்பிலும் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பங்களாதேஷில்இடம்பெறும் நெருக்கடிநிலைதொடர்பில்நாம் பெரும்கவலையடைகின்றோம். அந்நாட்டு ஆளும்தரப்பு மிக அண்மை யில்தான் ஆட்சிக்கு வந்திருந்தது. பலவந்தமாக நாட்டில் குழப்பகரமான சூழ்நிலையை ஏற்படுத்தி ஆட்சியை கைப்பற்றுவதற்கான குறுகிய நோக்கத்துடன் அங்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எமது நாட்டிலும் கடந்த இரண்டுவருடங்களுக்கு முன்னர் இதேபோன்ற வன்முறையை ஏற்படுத்திநாடாளுமன்றத்திற்கு தீவைக்கமுயன்றனர்.ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதியின் வாசஸ்தலம் உள்ளிட்ட கட்டடங்களுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து சேதப்படுத்தி அத்தோடு இல்லாமல் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் படுகொலைசெய்து அதன் பின்னர் நாடாளுமன்றத்திற்கு தீ வைத்து ஜனநாயகத்தை பூண்டோடுஒழிக்கமுற்பட்டனர். தற்போதைய பங்களாதேஷ் சம்பவங்கள் அதனையே எமக்கு நினைவுக்குக் கொண்டு வருகின்றன என்றார்.

# சீன காங்கிரஸ் குழுவினர் சபாநாயகருடன் சந்திப்பு

சீன ஹைனான் மாகாண மக்கள் காங்கிரஸின் நிலையியற் குழுவின் உப தலைவர் கலாநிதி ஸுன் தஹாய் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவினர் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக்கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழுவின் தலைவர் அமைச்சர் மஹிந்த அமரவீர, கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் மொஹான் பிரியதர்ஷன த சில்வா, உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ டி. வீரசிங்க, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஹைனான்மாகாணமக்கள்காங்கிரஸின் நிலையியற் குழுவின் உப தலைவர் இலங்கையின் அபிவிருத்திக்கு ஹைனான் மாகாணத்தினால் வழங்கக்கூடிய உதவிகள் தொடர்பிலும் அதற்காக மேற்கொள்ளும் நடைமுறைகள் தொடர்பிலும் விளக்கமளித்தார். அதன்படி, இலங்கையில் முதலீடு செய்வதற்கூ அந்த மாகாணத்தின் தொழில்முனைவோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்குத் தேவையான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஹைனான் மாகாணத்தின் வர்த்தகர்கள் கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் குறித்தும் அவர் நினைவுபடுத்தினார். அத்துடன், அந்த மாகாணத்திற்கும் இலங்கைக்கும் இடையில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர், இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையில் காணப்படும் நீண்ட நட்புறவை நினைவுபடுத்தினார். இந்நாட்டின் விவசாயத்தை மேம்படுத்த வழங்கும் ஆதரவுகளை ஹைனான் மாகாணத்தின் மக்கள் காங்கிரஸின் அதிகாரிகளுக்கு நன்றியைத் தெரிவித்தார். அதற்கமைய, சீனா இதுவரை இலங்கைக்கு வழங்கிய ஆதரவுகளுக்கு நன்றியைத் தெரிவித்த சபாநாயகர் இலங்கையின்அபிவிருத்திநடவடிக்கைகளுக்கு எதிர்காலத்திலும் சீனாவின் ஆதரவை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

அதனையடுத்து, இந்நாட்டின் விவசாயம் தொடர்பான தற்போதைய நிலைமை மற்றும் சவால்கள் பற்றி கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக்கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தலைவர் அமைச்சர் மஹிந்த அமரவீர ஹைனான்மாகாணத்தின்மக்கள்காங்கிரஸின் அதிகாரிகளுக்கு விளக்கமளித்தார்.

அதற்கமைய, இந்நாட்டின் பிரதான ஏற்றுமதி பயிருக்கு சந்தையை ஏற்படுத்தும் வகையில் இரு தரப்பினருக்கும் இடையில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பில் வருகை தந்த பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இந்நாட்டின்விவசாயப்பயிர்களுக்குஉரம் பயன்படுத்தும்வேலைத்திட்டம்தொடர்பில் உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ டி. வீரசிங்கவினால் தெளிவுபடுத்தப்பட்டது. அது தொடர்பான அறிக்கையையும் ஹைனான் மாகாண மக்கள் காங்கிரஸின் நிலையியற் குழுவின் உப தலைவருக்கு வழங்கிவைத்தார்.

இலங்கையின் விவசாயத் துறையின் மேம்பாட்டுக்கு அவர்களின் விசேட நிபுணத்துவ அறிவைக் கொண்ட வளவாளர்களை வழங்குவதற்கும், அறிவுப் பகிர்வு வேலைத்திட்டத்தின் ஊடாக விவசாயத் துறையின்விருத்திக்குநடவடிக்கைஎடுப்பதாக ஹைனான் மாகாண மக்கள் காங்கிரஸின் நிலையியற் குழுவின் உப தலைவர் இதன்போது தெரிவித்தார். இந்த சந்திப்பில் பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் தொடர்பாடல் திணைக்கள பதில் பணிப்பாளர் எம்.ஜயலத் பெரேரா உள்ளிட்ட நாடாளுமன்ற அதிகாரிகள் சிலரும் கலந்துகொண்டனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoos Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# அமைச்சர் சொல்வது பொய் சபையில் விஜித ஹேரத் பதிலடி

மக்கள் விடுதலை முன்னணியின் சட்டத்தரணி சுனில் வடகல தொழிற் சங்கத்தினரிடமிருந்து 55 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டு வழக்குக ளுக்கு முன்னிலையாகிறார் என்று அமைச்சர் குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் விடுதலை முன்னணியின் சட்டத்தரணி சுனில் வடகல தொழிற்சங்கத்தினரிடமிருந்து 55 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டு வழக்குகளுக்கு முன்னிலையாகிறார் என்று அமைச்சர் குறிப்பிடுவது முற்றிலும்பொய்யானது. நாடாளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்திக் கொண்டுபொய்யுரைப்பதைதவிர்த்துக் கொள்ள வேண்டும்.

சட்டத்தரணி சுனில் வடகல தொழிற்சங்கத்தினரிடமிருந்து ஒரு சதம் கூடப் பெறாமல் அவர்களுக்காக நீதிமன்றில்முன்னிலையாகுகிறார்.இந்த அமைச்சர்அவரதுவாய்ப்பேச்சுக்களை மாத்தறை மாவட்டத்தில் மாத்திரம் வைத்துக் கொள்ள வேண்டும். நாடாளுமன்றத்தில் ஏதும் பேசலாம் என்பதற்காகப் பிறர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க முடியாது.

மாத்தறை மாவட்டத்தில் அரசியல் கூட்டத்தை நடத்துவதற்கு ஒதுக்கப்பட்ட நிதியின் ஒரு பகுதியை இந்த அமைச்சர் மோசடி செய்தார் என்றும், கூட்டத்துக்குக் கட்சி ஆதரவாளர்களை அழைத்து வரவில்லை என்றும் ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் எம்மிடம் குறிப்பிடுகிறார்கள். ஆகவே உங்களின் குப்பைகளை உங்களிடம் வைத்துக்கொள்ளுங்கள் பிறிதொரு தரப்பினர் மீது பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்க வேண்டாம் என்றார்.

# 2 சட்டங்கள் அமுலுக்கு வந்தன

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2024 ஜூலை 17 ஆம் திகதி ‘இலங்கைத் தொலைத்தொடர்பு (திருத்தம்)’ எனும் சட்டமூலத்திலும், 2024 யூலை 19 ஆம் திகதி ’ஷைலி கல்விசார் மன்றம் (கூட்டிணைத்தல்)’ எனும் சட்டமூலத்திலும் சபாநாயகரின் சான்றுரை எழுதப்பட்டதாகபிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் அறிவிப்பு நேரத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# கடலோர பாதுகாப்பு சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கடலோர பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. கடற்கரை மாசுபாடு மற்றும் சட்டவிரோத கட்டுமானங்களை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். இதன்படி கரையோர வளங்கள் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம் புதுப்பிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், இலங்கையின் கரையோர வலயங்களை நிர்வகிப்பதற்கு ‘இலங்கை கரையோர வலயம் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம்’ தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

ஐந்தாண்டுகளுக்குஒருமுறைஇந்தத்திட்டத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்பது சட்டப்பூர்வமான தேவை. 2024 ஆம் ஆண்டில், இலங்கையின் கரையோர வலயங்கள் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம் அதற்கேற்ப புதுப்பிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டில் தொகுக்கப்படவுள்ள இலங்கை கரையோர வலயம் மற்றும் கரையோர முகாமைத்துவத் திட்டம், 2008 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் தொகுக்கப்பட்ட திட்டங்களின் அமுலாக்கத்தின் முன்னேற்றம் மற்றும் அதன் போது எழுந்த நிதி, நிறுவன, தொழில்நுட்ப மற்றும் பிற சிக்கல்களை மையமாகக் கொண்டு தொகுக்கப்படும்.

அதன்படி, கடலோர முகாமைத்துவம், கடலோர சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலையான முகாமைத்துவம், கடலோர மாசு கட்டுப்பாடு, சிறப்பு முகாமைத்துவப்பகுதிகள், ஒழுங்குமுறைபொறிமுறை (கடலோர அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஒப்புதல் வழங்கும் செயல்முறை) ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆய்வுகள் அந்தந்த விடயப் பிரிவுகள் தொடர்பான நிபுணர்கள் மற்றும் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் அதிகாரிகளின் பங்கேற்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை கருத்தில் கொண்டு புதிய சட்டம் இயற்றப்படுகிறது.

இவ்வருடம் இரணவில, உப்பாறு, கீரிமுண்டலம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்டியாவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி மற்றும் உஸ்வதகையாவ ஆகிய கடற்பகுதிகளில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 14 அவசரகால கரையோரப் பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அபிவிருத்திப் பணிகளுக்காக 520 மின் அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அறிக்கையின்படி, இவ்வருடம் ஏற்கனவே 30 கடற்கரை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டங்களும் 4 சதுப்புநில நடவு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக செலவிடப்பட்ட தொகை 300 மில்லியன் ரூபா.

இந்த ஆண்டில், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள மேலாண்மைத் திணைக்களம் 11 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. களுத்துறை கலிடோ, லுனாவ, வடக்கு உடப்பு, நிந்தவூர், சாய்ந்தமருது, மூதூர், மடிஹ, முதுகடுவ, கஹவ, இரணவில மற்றும் பண்டாரமுல்ல ஆகிய பகுதிகளில் இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் 7 கடலோரப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. மொரட்டுவை, களுத்துறை, கலிடோ, அம்பலாங்கொடை, போருதொட்டை, சாய்ந்துமருது, நிந்தவூர் மற்றும் திருக்கோவில் ஆகியவை அந்த கடற்கரைகளாகும். அதற்காக ஒதுக்கப்பட்ட தொகை 388.35 மில்லியன் ரூபா. 2023 ஆம் ஆண்டில் 102 கடற்கரையை சுத்தம் செய்யும் திட்டங்கள் மற்றும் 25 சதுப்புநிலத்தாவரங்கள் நடும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாக கடலோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்தவருடம் இரணவில, உப்பாறு, கீரிமுண்டலம், மூதூர், காரைதீவு, நிந்தவூர், புஸ்ஸ, தல்டியாவத்தை, கொக்கல, சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காத்தான்குடி, உஸ்வதகேயாவ, மருதமுனை ஆகிய கடற்கரைகளில் 20 அவசரகால பாதுகாப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. சுமார் 342 மீட்டர் பயனுள்ள கடற்கரை பாதுகாக்கப்பட்டுள்ளதாக கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



காலைக்கதிர் Kalaikkathir

## நாம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று நமது இளைஞர்கள் வேலை தேடி அமெரிக்கா, டுபாய், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு செல்கின்றனர். அந்த நாடுகளில் உள்ள நிலை ஏன் இலங்கையில் உருவாக்கப்படவில்லை என்று கேட்க வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாம் நம்மை அர்ப்பணிக்கவேண்டும். நாட்டை முன்னேற்றி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். இல்லையேல் இந்தக் கல்வியால்நாட்டுக்குஎந்தப்பயனும் கிடைக்காது. அப்படியானால், நாம் எப்போதும்வறியநாடாகவே இருக்க வேண்டியிருக்கும்.

அடுத்த 10 ஆண்டுகளில் திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். அந்தபொருளாதாரப்பரிமாற்றத்திற்கு தேவையானசட்டங்களைகொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏற்றுமதி பொருளாதாரம் வலுப்பெற்று உலக சந்தையை வெல்லவேண்டும் - என்றார்.

## 3 ஆயிரம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்றுஅலரிமாளிகையில்ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்ததாவது:

ஜனாதிபதி நிதியத்தின் புலைமைபரிசில் வழங்கும் திட்டத்தின் கீழ் மற்றுமொரு புதிய திட்டத்தை ஆரம்பித்திருக்கிறோம். அதனால்பிரிவெனாக்களில்பயிலும் சாதாரண மாணவர்களுக்கு உதவி வழங்கப்படுகிறது. அவர்களுக்குரிய தொகையை வங்கிகளில் வைப்புச் செய்துள்ளோம்.

மேலும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்காக ஜனாதிபதி நிதியத்தின் ஊடாக பல புலமைப்பரிசில் திட்டங்களை அறிமுகப்படுத்தினோம்.

நாட்டின் பொருளாதாரச் சரிவினால் கிராமப் பகுதிகளில் இருந்த விகாரைகளும் பிக்குகளும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கநேரிட்டது. எத்தகைய காரணங்களுக்காகவும்பிக்குகளின் கல்வி நிலை சரிவடைய இடமளிக்க கூடாது. அதற்காகவேஇந்ததிட்டத்தை பிக்குகளுக்காகவும் பிக்குனிகளுக்காகவும்செயற்படுத்துகிறோம்.

புத்த சாசனம் குறித்து கவனம் செலுத்தும்போது பிக்குகள் சமுதாயத்தைக்கட்டியெழுப்பக்கூடிய சூழலை நாட்டில் உருவாக்க வேண்டியுள்ளது. அதற்காக முன்னெடுக்ககூடிய முக்கியமான திட்டமாக இந்த புலைமைப் பரிசில் திட்டத்தைக் குறிப்பிடலாம்.

நாட்டில் பௌத்த கல்வியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். மேலும் இது மேம்படுத்தப்பட வேண்டும். பிரிவென் முறைமை ஆரம்பிக்கப்பட்ட போது அதற்கு உதவிகளை வழங்கும் வாய்ப்பு கிடைத்திருந்தது. நாட்டில்எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும் ஒருபோதும் அதற்குரிய பொறுப்புக்களை கைவிடப் போவதில்லை என்றார்.

## ஜனாஸாக்களை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லேயேஇதனைத்தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட் தொற்றில் உயிரிழந்த முஸ்லிம் பிரஜைகளின் சடலங்களைத்தகனம்செய்தமைக்கு மன்னிப்பு கோருவதற்கு ஆளும்தரப்பு அமைச்சரவைத் தீர்மானம் எடுத்திருப்பதை வரவேட்கிறேன். கோத்தாபய ராஜபக்ச ஆளும்தரப்பில் முஸ்லிம் மக்களின் மதக் கலாசாரத்தை சீரழித்து, இனவாத அடிப்படையில் முஸ்லிம்மக்களைஇலக்குவைத்தே இந்தத் தீர்மானத்தை அன்று அமைச்சரவையில் எடுத்தனர்.

இதற்கு தற்போது அமைச்சரவையில் இருக்கும் சிலர் ஆதரவளித்தனர். என்றாலும் இந்த நடவடிக்கையை விட்டு விடுவதற்காக தற்போதாவது இடம்பெற்ற சம்பவத்துக்காக மனிப்புகோர எடுத்த தீர்மானத்தை மதிக்கிறேன். அதேநேரம் கொவிட் தொற்றில் உயிரிழந்தவர்களை எிப்பதற்குயாருடையஅறிக்கையின் அடைப்படையில் இந்த பிழையான தீர்மானம் எடுக்கப்பட்டது? இதற்கு ஆலாசேனை வழங்கியது யார்?

வழங்கிய ஆலாசேனையை ஜனாதிபதி உள்ளிட்ட அரசியல் அதிகாரிகள் ஏன் ஆராய்ந்து பார்க்கவில்லை? உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டலை புறந்தள்ளிவிட்டு,ஏன்இந்தஅநீதியை முஸ்லிம் சமூகத்துக்கு செய்தீர்கள்.

அத்துடன் தற்போது கொவிட் சடலம்எரிப்புதொடர்பில்திரைப்படம் தயாரிப்பதாக தெரியவருகிறது. இதனுடன் தொடர்புபட்ட அரசியல்வாதிகளைபாதுகாப்பதற்கே இதனை செய்கிறார்கள். இதற்காக வெட்கப்படவேண்டும்.

அந்த காலப்பகுதியில் இதற்கு எதிராகவீதிக்குகூடஇறங்கவில்லை. ஆனால் முஸ்லிம் சமூகத்தை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட கீழ்த்தரமான செயலுக்கு எதிராக

## வங்கி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

9.5 சதவீதத்திலிருந்து 9.25 சதவீதமாகவும்0.25சதவீதத்தினால் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, இதன் நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் சந்தை வட்டிவீதங்களை குறைப்பதற்கான உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு நிதி நிறுவனங்களிடம் மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மத்திய வங்கி விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடுத்தரகாலத்தில்பணவீக்கத்தை 5 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மட்டத்தில்பேணுகின்றஅதேவேளை பொருளாதாரம்அதன்முழுமையான இயலளவினை அடைவதை இயலச்செய்யும்நோக்கில்உள்நாட்டு மற்றும்உலகளாவியநிலைமைகள் தொடர்பிலான தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் சாத்தியமான இடர்நேர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைக் கவனமாக மதிப்பீடு செய்ததன் பின்னர் சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டது.

இத்தீர்மானத்தை மேற்கொள்கையில், சபையானது மிதமான பணவீக்கத்தோற்றப்பாடொன்றிற்கு மத்தியில் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் தொடர்ச்சியினைச் சமிக்ஞை செய்வதுடன் அதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளுக்குஆதரவளிக்கும்பொருட்டு சந்தைக்கடன்வழங்கல்வீதங்களில் மேலுமொரு குறைப்பினைத் தூண்டுவதற்கான தேவையினைச் சபை கருத்திற்கொண்டது.

கிடைப்பனவாகவுள்ள தகவல்களின் அடிப்படையில், பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட மட்டத்துடன்இசைந்து செல்வதற்கு முன்னர் அடுத்த ஒரு சில மாதங்களுக்கு 5 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கிற்குக் கீழாக கணிசமானளவிலான இடைவெளியொன்றுடன் தொடர்ந்தும் காணப்படக் கூடுமென்பதனைச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






## கிளி. மீனவர்களுக்கு சீனாவின் அரிசி

சீனா அரசாங்கத்திடமிருந்து கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்படும் அரிசியை மீனவர்களிடம் வழங்கும் செயற்றிட்டம் கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது

அரிசி அடங்கிய இரண்டு கொள்கலன்கள் செவ்வாய்க்கிழமை கனர வாகனமொன்றில் கிளிநொச்சி மாவட்டத்தை வந்தடைந்தது.

இந்நிலையில், குறித்த அரிசி வழங்கும் மாவட்ட நிகழ்வு பூநகரி கடற்றொழில் அலுவலகத்தில் நேற்றுக் காலை 9:30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பா.ரமேஸ்கண்ணா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் மாவட்ட அபிவிருத்தி குழு இணைப்பாளர் இட்ணம் அமீன் அவர்கள் கலந்துகொண்டு குறித்த செயற்றிட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்றொழில் திணைக்களம் ஊடக 2,981 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு இருபது கிலோக்கிராம் அரிசி வீதம் வழங்கப்படவுள்ளது.

தொடர்ந்து இந்த அரிசி பளை, கண்டாவளை, பூநகரி, நாச்சிக்குடா ஆகிய நான்கு கடற்றொழில் அலுவலகங்கள் ஊடகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பூநகரி கடற்றொழில் அலுவலக உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளத்தின் தலைவர், மாவட்ட அபிவிருத்தி குழு அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

சீன ஆளும்தரப்பு கடற்றொழிலாளர்களுக்கு அரிசி மற்றும் மீன்பிடி வலை வழங்கல் மற்றும் வீட்டுத்திட்டம் முதலான செயற்றிட்டங்களை வாழ்வாதாரமாக வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(113)

## நிதி ஒதுக்கீடு

நாடாளுமன்ற உறுப்பினரின் டி-100 வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் விசேட நிதி ஒதுக்கீட்டில் பயனாக சம்மாந்துறை கல்வி வலய சம்மாந்துறை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆய்வுகூட மேம்பாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆவணம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

கமு/சது/அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி அதிபர் எச்.எம். அன்வர் அலி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம். முகம்மட் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஒன்றரை மில்லியன் ரூபாய்க்கான நிதி ஒதுக்கீட்டு ஆவணத்தை கையளித்தார். அவரின் மூ-லமாகவே இந்த நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நௌபர் ஏ பாபா, வெகுஜன மக்கள் தொடர்பாடல் செயலாளர் நூருல் ஹூதா உமர், பாடசாலை பிரதி உதவி அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் சங்கத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# பெருந்தோட்ட நிறுவனங்கள் குறித்த புதிய சட்டம் ஏற்படுத்தப்படவேண்டும்

## வடிவேல் சுரேஷ் எம்.பி. வலியுறுத்து

பெருந்தோட்டங்கள் தொடர்பில் புதிய சட்டம் ஒன்றை ஏற்படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நீதித்துறை சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

நாட்டில் ஏனைய சமூகங்களுக்கு இருக்கும் பொதுவான அனைத்து சட்டங்களும் மலையக சமூகத்துக்கும் வழங்க வேண்டும் அத்துடன் உழைப்புக்கு ஏற்ற சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஜனாதிபதியின் உத்தரவையும் மீறி பெருந்தோட்ட கம்பனிகள் செயற்படுகின்றன.

சம்பள அதிகரிப்புக்கு எதிராக பெருந்தோட்ட கம்பனிகள் நீதிமன்றம் சென்று, சம்பள அதிகரிப்புக்கு தடை உத்தரவையும் பெற்றுள்ளன. இது உலகில் எங்கும் இடம்பெறாத ஒன்றாகவே பார்க்கிறேன். இது மலையக மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அநீதியாகும்.

பெருந்தோட்டங்களும் மேற்கொள்ளப்படும் கூட்டு ஒப்பந்தம் இந்த நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டே மேற்கொள்ளப்படுகிறது. நாட்டின் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. 25 மாவட்டங்களில் 11 மாவட்டங்கள் பெருந்தோட்டங்களாக இருக்கின்றன. அதிகமான காணிகள் அந்தப் பெருந்தோட்ட கம்பனிகளுக்கு இருக்கின்றன. 22 கம்பனிகள் அந்த மக்களுடைய மனித உரிமையை மீறி அங்கு நிர்வாகம் நடத்தி வருகின்றன. அதனால் இதற்கு எதிராக புதிய சட்டம் ஒன்றை ஏற்படுத்த அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பெருந்தோட்டங்களை கிராமங்களாக்கும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பிப்பதாக தெரிவித்திருப்பதை சட்டமாக்கி வர்த்தமானியில் வெளியிட்டால் எமது மக்கள் நிம்மதியாக வாழக் கூடிய நிலைமை ஏற்படும். அதனால் நாட்டில் ஏனைய சமூகங்களுக்கு இருந்து வரும் அனைத்து சட்டங்களும் மலையக பெருந்தோட்ட மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை ஆளும்தரப்பு முன்னெடுக்க வேண்டும் என்றார்.

# நாடாளுமன்றத்தின் முறையீடுகள் குறித்து அரச நிறுவனங்கள் கவனிப்பதே இல்லை

## நீதி அமைச்சர் குற்றச்சாட்டு

நாடாளுமன்றத்தால் அரச நிறுவனங்களுக்கு அனுப்பப்படும் முறையீடுகள் தொடர்பில் அந்த நிறுவனங்கள் நடவடிக்கை எடுப்பதில்லை என்று என்று நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

கோப் மற்றும் கோபா போன்ற தெரிவுக் குழுக்கள் மூலம் விநியோகிக்கப்படும் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துதல் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்துக்களை முன் வைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கோப் மற்றும் கோபா போன்ற தெரிவுக் குழுக்கள் மூலம் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும்போது நேரடியாகவே சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுக்கு அதனை அனுப்பக்கூடிய அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு உள்ளது.

2007 ஆம் ஆண்டு நான் முன்வைத்த கோப் அறிக்கைகள் இரண்டில் 16 மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்றி அது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு அது அனுப்பப்பட்டது.

அதேபோன்று மேலும் 10 அல்லது 11 நிறுவனங்களின் நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்காக அது பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பப்பட்டது.

அந்த நிறுவனங்களினால் அனுப்பப்படும் முறைப்பாடுகள் சபாநாயகரினால் அனுப்பப்பட்டாலும் உரிய நிறுவனங்கள் அது தொடர்பில் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை. அதனைக் கவனத்திற் கொண்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களை அழைத்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குவது அவசியம் - என்றார்.

# அரச நிதிக் குழுவின் அறிக்கை பொய் சிறப்புரிமை குழுவில் விசாரியுங்கள்

## நிதி இராஜாங்க அமைச்சர் வலியுறுத்து

அரசநிதிக்குழு 2024.07.12 அன்று சமர்ப்பித்த அறிக்கையின் உள்ளடக்கம் முற்றிலும் பொய்யனது. இவ்விடயத்தை நாடாளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழுவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வின்போது சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து அவர் உரையாற்றினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024.07.12 ஆம் திகதியன்று அரச நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் ஊடாக விசா விநியோகித்தல் குறித்து சபைக்கு அறிக்கை சமர்ப்பித்தார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் ஊடாக வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகத்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அறிக்கைக்கு குழுவின் சகல உறுப்பினர்களும் இணக்கம் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிதி குழுவில் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளின் 27 உறுப்பினர்கள் உள்ளார்கள். தலைவர் எடுத்த தீர்மானத்துக்கு நான் உட்பட 16 உறுப்பினர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை என்பதை நாங்கள் எழுத்து மூலமாக சபாநாயகருக்கு அறிவித்துள்ளோம். அந்த கடிதத்தின் பிரதியை சபைக்கு சமர்ப்பிக்கிறேன்.

2024.07.12 ஆம் திகதி அரச நிதி குழு சமர்ப்பித்த அறிக்கையின் உள்ளடக்கம் முற்றிலும் பொய்யனது. இதற்கமைய 1953 ஆம் இலக்க நாடாளுமன்ற தத்துவங்களுக்கு அமைய உயர் நீதிமன்றத்தினால் தண்டனைக்குரிய குற்றமாகும். நாடாளுமன்றத்துக்கு போலியான ஆவணங்களை சமர்ப்பிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அரச நிதி குழுவின் தலைவர் முன்வைத்த பொய்யான அறிக்கையினால் எமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடயத்தை நாடாளுமன்ற சிறப்புரிமை மற்றும் ஒழுக்கவியல் குழுவில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றார்.

# ஜே.வி.பி. சட்டத்தரணி காசு பெற்றார் அமைச்சர் காஞ்சன குற்றச்சாட்டு

மின்சார சபைத் தொழிற்சங்கத்தினரை மக்கள் விடுதலை முன்னணியினரே வீதிக்கு இறக்கினார்கள். தொழிற்சங்க போராட்டத்தின்போது ஏதேனும் நெருக்கடிகள் ஏற்பட்டால் நீதிமன்றத்தில் இலவசமாக முன்னிலையாகுவதாக மக்கள் விடுதலை முன்னணியினர் உறுதியளித்திருந்தார்கள். இருப்பினும் இந்த 62 சேவையாளர்களிடமிருந்து ஜே.வி.பி. சட்டத்தரணி சுனில் வடகல 55 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளார் என்று மின்சாரத்துறை மற்றும் வலு சக்தித்துறை அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமர்வில் ஆளும் தரப்பின் உறுப்பினர் பிரேம்நாத் சி.தொலவத்தே வாய்மூல விடைக்கான வினாக்களின் போது முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்கட்டணத்தை திருத்தம் செய்ய அரச கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானத்துக்கு அமைய கடந்த 2022 ஆம் ஆண்டு மின்கட்டணம் திருத்தம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மூன்று தடவைகள் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டள்ளதுடன், மூன்று தடவைகள் மின்கட்டணம் குறைக்கப் பட்டுள்ளது.

புதிய மின்சார சபை சட்டத்தை நிறைவேற்றினால் மின்கட்டமைப்பு துறையின் சகல கட்டமைப்புக்களும் தனியார் மயப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுக் கொண்டு கடந்த ஜனவரி மாதம் அரசியல் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி மின்சார சபை தொழிற்சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பு போராட்டங்களிலும், தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்கள்.

மின்சார சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மின் விநியோகம் மற்றும் பொது சேவைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுங்கள் என்று குறிப்பிட்டோம். ஒரு சில தொழிற்சங்கத்தினர் சேவை கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

புதிய மின்சார சபை சட்டம் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டு, சட்டம் இயற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் மின்சார சபை தனியார் மயப்படுத்தப்படவில்லை. தொழிற்சங்க நடவடிக்கையின் போது மின்சார சபையின் 62 சேவையாளர்கள் மின்சார சபையின் நிதி கரும பீடத்தை மூடி சேவை கட்டமைப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தினார்கள்.

இவர்களை நான் சேவையில் இருந்து நீக்கவில்லை. மின்சார சபையின் கட்டுப்பாட்டாளரே அவர்களை சேவையில் இருந்து தற்காலிகமாக நீக்கினார். இவர்களுக்கு எதிராக நிறுவன மட்டத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த தொழிற்சங்கத்தினரை மக்கள் விடுதலை முன்னணியினரே வீதிக்கு இறக்கினார்கள். தொழிற்சங்க போராட்டத்தின் போது ஏதேனும் நெருக்கடிகள் ஏற்பட்டால் நீதிமன்றத்தில் இலவசமாக முன்னிலையாகுவதாக மக்கள் விடுதலை முன்னணியினர் குறிப்பிட்டுள்ளார்கள்.

இருப்பினும் இந்த 62 சேவையாளர்களிடமிருந்து மக்கள் விடுதலை முன்னணியின் சட்டத்தரணி சுனில் வடகல 55 இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டுள்ளார். நாட்டு மக்கள் உண்மையை தெரிந்துக் கொள்ள வேண்டும் என்றார்.

# ஜனாதிபதியை எதிர்த்து வீதிக்கு இறங்குவோம்

## சந்திம வீரக்கொடு எம்.பி. அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகின்றார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விரைவில் வீதிக்கு இறங்குவோம் என்று எதிரணியின் சுயாதீன உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்பில் உள்ள சட்டங்களை நடைமுறையில் செயற்படுத்த நீதியமைச்சர் கடுமையான சூழ்நிலையில் பல ஒழுங்குவிதிகளையும் சட்ட திருத்தங்களையும் கொண்டு வந்துள்ளார். இருப்பினும் நடைமுறை நிலைவரங்கள் அச்சுறுத்தும் நிலையில் காணப்படுகிறது.

காலி நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அருகில் சட்டவிரோதமான முறையில் மதில் சுவர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் முற்றிலும் வெறுக்கத் தக்கது. இதற்கு யார் பொறுப்பு கூறுவது.

தேர்தல் சட்டத்தை மீறும் செயல்பாடுகள் முன்னெடுக்கபடுகின்றன.

ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கும் வகையில் ஆளும் தரப்பு எடுக்கும் தீர்மானங்கள் தேர்தல் சட்டத்துக்கு எதிரானதாக காணப்படுகிறது.

ஜனாதிபதியும் ஒரு சட்டத்தரணி ஆனால் அவர் தேர்தல் சட்டத்தை மீறுகிறார். ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் நிலையில் அவர் அரச அதிகாரத்தை கொண்டு தேர்தல் சட்டத்தை மீறுகிறார். அதிகாரத்தை தவறாக பயன்படுத்துகிறார். இதற்கு எதிராக வெகுவிரைவில் வீதிக்கு இறங்குவோம் என்றார்.

# திருப்புகழ் மாநாட்டு விருது

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய நிர்வாகத்தினர் அங்கு இடம்பெற்ற திருப்புகழ் மாநாட்டுக்கு வழங்கிய மகத்தான ஒத்துழைப்பிற்காக அவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கொடியேற்றதினத்தன்று இந்த விருது திருப்புகழ் மாநாட்டை நடத்திய 3 இந்து அமைப்புகளால் வழங்கப்பட்டது.

திருக்கோவில் சித்திர வேலாயுதர் சுவாமி ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையிலான குழுவினர் அந்த விருதை பெற்றுக் கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டால் சிஐடியினரிடம் அவர்கள் முறையிடலாம்

## ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் இருந்தால் அவர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறையிடலாம். ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உரிமையையும் உறுதிப்படுத்துவதற்கு ஆளும்தரப்பு கடமைப்பட்டுள்ளது என்று வெகுஜன ஊடகத்துறை அமைச்சர், அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசதகவல்திணைக்களத்தில்செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும்செய்தியாளர்கள்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே ஊடகத்துறை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய ஆளும்தரப்பு எந்தவொரு ஊடகவியலாளரையும் அச்சுறுத்தி சித்திரவதை செய்யவில்லை. ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஊடக அமைச்சர் என்ற வகையில் தான் நாடாளுமன்றத்தில் விசேட கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளேன்.

அச்சுறுத்தல்கள் இருப்பதாகவோ அல்லது அவ்வாறானவிடயங்களுக்குமுகம்கொடுப்பதாகவோ எவரேனும் கருதுமிடத்து, அவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்ய முடியும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். பொலிஸாரும் பாதுகாப்பு தரப்பினரும் அதற்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவார்கள். இதனையே ஆளும்தரப்பினால் மேற்கொள்ள முடியும் என்றார்.

## செம்மலை, நீராவியடி ஆலய பொங்கலில்

# சிவலிங்கம் வைப்பதாக பரப்பிய வதந்தியை நம்பிய பொலிஸார்

(கே.குமணன்)

முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடி பிள்ளையார் ஆலய வருடாந்த பொங்கல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. கொக்குளாய் பொலிஸார் இந்த பொங்கல் நிகழ்வைத் தடுத்து நிறுத்த நேற்று முல்லைத்தீவு நீதிமன்றை நாடினர்.

தொல்லியல் திணைக்களத்துக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக இன்று இடம்பெறும் நீராவியடி பிள்ளையார் ஆலய பொங்கல் நிகழ்வில் ஆலய வளாகத்தில் 17 அடி சிவலிங்கம் ஒன்று நிறுவப்படவுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக இதனை நிறுத்துமாறு கோரி கொக்குளாய் பொலிஸ் நிலையத்தில் தொல்லியல் திணைக்களத்தால் நீராவியடி பிள்ளையார் ஆலய நிர்வாகத்துக்கு எதிராக முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து இன்றையதினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் கொக்குளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் நீராவியடி பிள்ளையார் ஆலய பூசகர் மற்றும் நிர்வாகத்தினருக்கு எதிராக வழக்கு ஒன்றினை தாக்கல் செய்து குறித்த பொங்கல் நிகழ்வில் புதிதாக சிலைகள் வைப்பதைத் தடை செய்யுமாறும் புதிய கட்டுமானங்களை செய்வதை தடை செய்யுமாறும் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது. இதனை ஆராய்ந்த மன்று இந்த ஆலய விவகாரம் தொடர்பில் ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய உத்தரவை தொடர்ந்தும் நீராவியடி பிள்ளையார் ஆலயம் மற்றும் பௌத்த விகாரை தரப்பினர் பேணவேண்டும் என்றும் அதனை மீறி யாராவது புதிய கட்டுமானங்கள், புதிய சிலைகளை நிறுவினால் பொலிஸார் நடவடிக்கை எடுக்கலாம் எனவும் சுட்டிக்காட்டியது. ஏற்கனவே நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டுள்ள படி இரு தரப்பும் அமைதியான முறையில் நீதிமன்ற உத்தரவை மீறாது வழிபாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் சுட்டிக்காட்டியது.

கடந்த இரு நாட்களாக தென்பகுதியை சேர்ந்த சில முகநூல் கணக்குகள் ஊடாக சிங்கள மக்கள் மத்தியில்கொதிநிலையைதோற்றுவிக்கும்வண்ணம் நீராவியடி பிள்ளையார் ஆலய பொங்கல் நிகழ்வு தொடர்பில் பொய் செய்திகள் பரப்பப்பட்டு வந்ததோடு நேற்றையதினம் ஆலய நிர்வாகத்தினரிடம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தொல்லியல் திணைக்களத்தினர் இந்த பொய் வதந்தி தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு பொங்கல் நிகழ்வு தொடர்பில் பொய் செய்திகளை சமூகவலைதளங்கள் ஊடக பகிர்ந்து வந்த தென்பகுதியை சேர்ந்த முகநூல் கணக்குகள் இதே போன்று கடந்த வருடம் குருந்தூர் மலை பொங்கல் நிகழ்வு தொடர்பிலும் பொய் வதந்திகளையும் வெறுப்பு பேச்சுக்களையும் சமூக வலைத்தளங்கள் மூலம் பகிர்ந்து சிங்கள மற்றும் தமிழ் மக்கள் மத்தியில் கொதி நிலையை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்தன.

# கனமூலை முஸ்லிம் மகா வித்தி.க்கு ஆங்கில போட்டியில் 7 முதலிடங்கள்

(எம் சியாஜ்

இம்முறை இடம்பெற்ற கோட்ட மட்ட ஆங்கில மொழி தினப் போட்டியில் கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் ஏழு மாணவர்கள் முதலாம் இடங்களையும் மூன்று மாணவர்கள் இரண்டாம் இடங்களையும் நான்கு மாணவர்கள் மூன்றாம் இடங்களையும் பல்வேறு போட்டிகளில் பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் பீ.எம் முஸ்னி தெரிவித்துள்ளார்.

இதன்படி தரம் 13 ஐச் சேர்ந்த ஏ.அர் அம்ரா மற்றும் தரம் 11 ஐச் சேர்ந்த கே எப் சமீஹா ஆகிய இருவரும் பார்த்தெழுதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த என்.எப் ரீமா சொல்வளம் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எஸ்.எப் சஸ்மின் , தரம் 10 ஐச் சேர்ந்த எம்.ஐ.எப் சர்ஹா , மற்றும் தரம் 05 ஐச் சேர்ந்த எம்.எப் சபியா ஆகியோர் கவிதை போட்டியிலும், தரம் 11 ஐச் சேர்ந்த எப். பர்வீஸ் எழுத்தாக்கம் போட்டியிலும் முதலாம் இடங்களை பெற்றுக் கொண்டனர்.

மேலும் தரம் 09 ஐச் சேர்ந்த ஐ.எம் சதா பார்த்த எழுதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எம்.என்.எப் ரீமா சேர்த்தெழுதல் போட்டியிலும் தரம் 11 ஐச் சேர்ந்த எப். இபா ஆங்கில பேச்சு போட்டியிலும் இரண்டாம் இடங்களை பெற்றனர்.

தரம் 08 ஐச் சேர்ந்த எம்.எப் அம்ரா பார்த்தெழுதல் போட்டியிலும் , தரம் 11 ஐச் சேர்ந்த எம்.என் அப்ரா சொல்வளம் போட்டியிலும், தரம் 09 ஐச் சேர்ந்த ஐ.எம் இஹ்மா மற்றும் தரம் 03 ஐச் சேர்ந்த எம்.எப் அனீகா ஆகிய இருவரும் கவிதை போட்டியிலும் மூன்றாம் இடங்களை பெற்றுக் கொண்னர்.

# கல்முனையில் கை கழுவுதல் தினம்

*( வி.ரி. சகாதேவராஜா)*

*உலககைகழுவுதல்தினத்தினை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் நேற்று சிறப்பான நிகழ்வு காலை 10 மணிக்கு இடம்பெற்றது.*

*இந்நிகழ்வு வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ் எல்.தாஹிரா தலைமையில் இடம்பெற்றது.*

*இந்நிகழ்வில் வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் ஜே.மதன், தாதிய பரிபாலகர்கள் மற்றும் பொறுப்பு தாதிய உத்தியோகத்தரகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தாரகள்.*

*இந்நிகழ்வுபிரதிப்பணிப்பாளர்மருத்துவர் தாஹிராவின் தலைமை உரையுடன் ஆரம்பித்தது. வைத்தியசாலையின் திட்டமிடல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி மருத்துவர் மதன் சிறப்பு விரிவுரை வழங்கினார். உத்தியோகத்தர்களுக்கான செய்முறைப் பயிற்சியும் வழங்கப் பட்டது.*

# பாடசாலை நுழைவாயிருக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று

(நூருல் ஹுதா உமர்)

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யில் நிர்மாணிக்கப்படவுள்ள வரவேற்பு நுழைவாயிலுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி அதிபர் எம்.ட. முஹம்மட் ஜனூபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம். முகம்மட் ஹரீஸ் அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கேட்போர் கூடத்திற்கு அடிக்கல் நாட்டினார். அவராலேயே இதற்கான நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்வி பணிமனை நிர்வாக பிரதி கல்வி பணிப்பாளர் பி.எம்.வை. அரபாத் முகைதீன், சம்மாந்துறை மஜ்லிஸ் அஸ்-சூரா தலைவர் ஓய்வு பெற்ற சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி அஷ்ஷேக் எம்.ஐ. அமீர் (நளீமி), சம்மாந்துறை உலமா சபை தலைவர் மௌலவி எம்.எல்.எச்.பஷீர் (மதனி), திருகோணமலை மாவட்ட பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எம்.எம். மஹ்ரூப் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

# ஸ்கை தமிழ் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

(எம் சியாஜ்)

நாட்டின் சிறந்த ஆளுமைகளைத் தெரிவு செய்து அவர்களுக்கான கௌரவத்தை வழங்கும் 'ஸ்கை தமிழ் விருது - 2024'க்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

கடந்த வருடம் கட்டாரில் உள்ள ஆளுமைகளை மிக பிரம்மாண்டமான முறையில் கௌரவித்த ஸ்கை தமிழ், இம்முறை இலங்கையிலுள்ள ஆளுமைகளைத் தெரிவு செய்து அவர்களுக்கான கௌரவத்தை வழங்கவுள்ளது

விருது வழங்கப்படும் பிரிவுகள்:

* ஊடகம் மற்றும் பத்திரிகை
* இலக்கியம்
* சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்
* கலை மற்றும் கலாசாரம்
* விளையாட்டுத்துறை
* சமூக சேவை
* வணிகம் மற்றும் தொழில்முனைவோர்
* கல்வி & தொழில்நுட்பம்
* விவசாயம் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டுவோர் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இவ்விருதுக்கு நீங்கள் தகுதியானவர் எனக்கருதினால், கீழே தரப்பட்டுள்ள Google விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் சுயவிவரங்களுடன் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களையும் எமக்கு அனுப்பிவையுங்கள்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக றூலிலிஆயிள படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பங்களை https://forms.gle/Yn2vf8DECFzVUhe59 என்ற இணைப்பு ஊடாக அனுப்பி வைக்கலாம்.மேலதிக தகவல்களை அறிய: 0757000791 | +97431060249 என்ற வட்ஸ்அப் இலக்கங்களோடு தொடர்புகொள்ளலாம். www.awards.skytamilnews.com என்ற இணையத்தள முகவரியின் ஊடாகவும் விவரங்களை அறிந்துகொள்ளலாம்.

# அதிபரை மாற்றக் கோரி ஆர்பாட்டம்

வவுனியா, இராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலத்தின் அதிபரை மாற்றுமாறு கோரி பெற்றோர்கள் சிலரால் நேற்று ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காலையில் பாடசாலை முன்பாகக் கூடிய பெற்றோர் சிலர் குறித்த பதாகைகளைத் தாங்கியபடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

''எமது பாடசாலை கல்வி வீழ்ச்சி நிலையினை கண்டுள்ளது. பாடசாலையில் இடம்பெறும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கணக்கறிக்கைகள் எவையும் சமர்பிக்கப்படவில்லை. அங்கு இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக பெற்றோர்களிற்கு அறிவித்து கலந்துரையாடப்படுவதில்லை. பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு போகும் நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலையில் இருந்த ஆண் ஆசிரியர்கள் அனைவரும் இடமாற்றப்பட்டது ஏன்? இந்தநிலைமை தொடர்ந்தால் பாடசாலையினை இழுத்து மூடவேண்டிய நிலைமையே ஏற்படும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவித்தனர்.

இந்தக் காரணங்களால் அதிபரை உடனடியாக மாற்றித்தருமாறு உரிய அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம் என்றனர்.

''நான் பொறுப்பேற்ற பின்னர் பாடசாலையில் பல அபிவிருத்தி வேலைத்திட்டங்களைச் செய்துள்ளோம். குறிப்பாக வெளிநபர்களின் உதவிகளை பெற்று மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு உதவியுள்ளோம். வறுமைப்பட்ட மாணவர்களின் தேவைகருதி சத்துணவு திட்டத்தினை விரிவாக்கியுள்ளோம். அனைத்திற்கும் கணக்கறிக்கை சமர்பிக்கப்பட்டு அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

பாடசாலையின் நிர்வாகத்தை ஒரு சில நபர்கள் சொல்வது போல நடத்தமுடியாது. சில பெற்றோர்கள் தமது பிள்ளைகள் விடயத்தில் சரியாக செயற்பட்டால் நாம் பாடசாலையில் மாணவர்களுடன் முரண்படவேண்டிய தேவை ஏற்படாது" என்று அதிபர் தன் தரப்பில் விளக்கமளித்தார்.

(100)

# கலந்துரையாடல்

*(அஸ்ஹர் இப்றாஹிம்)*

*சுற்றுலாத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான தேசிய மக்கள் சக்தியின் கொள்கை அணுகுமுறையை விளக்கும் கலந்துரையாடலொன்று கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டல் வளாகத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.*

*இலங்கை ஹோட்டல் சங்கத்தின் உறுப்பினர்களுடன் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.07.2024இல் வெளியிடப்பெற்றது